


# இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும்:

# நிலைத்திருப்பதற்கான பிரயத்தனம்

சர்வதேச பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் இலங்கையில்
கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பான பணிக்குழு

ஜனவரி 2007

சர்வதேசப் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்துவெளிப்பாட்டுச்
சுதந்திரத்திற்கான பணிக்குழுவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்:

ARTICLE XIX
ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு (CPJ)
சுதந்திரக்குரல் (FreeVoice)
சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு (IFJ)
சர்வதேச கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர பரிமாற்றம் (IFEX)
சர்வதேச ஊடக அனுசரணை (IMS)
சர்வதேசப் பத்திரிகையாளர் நிறுவனம் (IPI)
சர்வதேச செய்திப் பாதுகாப்பு நிறுவனம் (INSI)
எல்லைகளற்ற செய்தியாளர்கள் (RSF)
தெற்காசிய பத்திரிகை ஆணைக்குழு (SAPC)
ஐக்கிய நாடுகள் கல்வி. விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனம் (UNESCO)
சமூக வானொலி ஒலிபரப்பாளர்களுக்கான சர்வதேச அமைப்பு (AMARC)
செய்தித்தாள்களின் உலகக் கூட்டமைப்பு (WAN)
உலக பத்திரிகைச் சுதந்திரக் குழு (WPFC)

இந்த அறிக்கையில் உள்ள விடயங்கள், ஒக்டோபர் 2006ல் இடம்பெற்ற கூட்டுப் பணிக்குழுவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

அட்டைப் படம்: **சுதந்திர ஊடக இயக்கம்**

## குறியீட்டுச் சொற்களும் கலைச்சொற்களும்

| | |
|---|---|
| AMARC | சமூக வானொலி ஒலிபரப்பாளர்களுக்கான சர்வதேச அமைப்பு |
| ANCL | தேசிய பத்திரிகைக் கூட்டுத்தாபனம் |
| CPA | மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் |
| EPDP | ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி |
| FMM | சுதந்திர ஊடக இயக்கம் |
| GoSL | இலங்கை அரசாங்கம் |
| IDP | உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் |
| IFJ | சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு |
| IMS | சர்வதேச ஊடக அனுசரணை |
| INSI | சர்வதேச செய்திப் பாதுகாப்பு நிறுவனம் |
| IPI | சர்வதேச பத்திரிகையாளர்கள் நிறுவனம் |
| LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| MRTC | ஊடக மூலவளப் பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம் |
| PCCSL | இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு |
| RSF | எல்லைகளற்ற செய்தியாளர்கள் |
| SAPC | தெற்காசிய பத்திரிகை ஆணைக்குழு |
| SLA | இலங்கை இராணுவம் |
| SLBC | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| SLPI | இலங்கைப் பத்திரிகைச் சங்கம் |
| TMA | தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் |
| UNESCO | ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனம் |
| WAN | செய்தித்தாள்களின் உலகக் கூட்டமைப்பு |
| WPFC | உலக பத்திரிகைச் சுதந்திரக் குழு |

தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் ஆர்வம் மற்றும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், ஊடக அனுசரணையாளர்கள் ஆகியோரிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த அறிக்கை அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக வெளியிடப்படுகிறது. இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்கள், 2006 ஒக்டோபர் காலப்பகுதியில் பணிக்குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள், மற்றும் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையிலானவை என்பதுடன், இதுதொடர்பாக கருத்துக் கூறவோ, செயற்படவோ விரும்பும் எவரும் இவற்றை சுதந்திரமான முறையில் மீள்பரிசோதனை செய்யவேண்டும்.

தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து இது தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகளை பணிக்குழு உறுப்பினர்கள் வரவேற்பதுடன், இதில் பங்கேற்ற நிறுவனங்களுக்கு அவற்றை அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றனர்(தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்களை இவ்வறிக்கையின் முடிவில் பார்க்கலாம்)

# உள்ளடக்கம்


**முதன்மைச் சுருக்கம்** ........................................................ 03

1 **அறிமுகமும் பின்னணியும்** ............................................... 03

2 **தண்டனையிலிருந்து விடுபடுதலும், பாதுகாப்பும்** ...................... 03

3 **தணிக்கை** ................................................................... 03

4 **ஊடகக் கொள்கைச் சூழல்** ............................................... 03

5 **அவதானிப்புகளும், ஆலோசனைகளும்** ................................. 03

6 **பின்னிணைப்புக்கள்** ........................................................ 03

6.1 பின்னிணைப்பு 1:........................................................ 19
'இலங்கையில் ஊடகப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் தண்டனையிலிருந்து தப்புவதைத் தடுத்து நிறுத்துங்கள்: தெற்காசிய பத்திரிகையாசிரியர் பணிக்குழு' என்ற தலைப்பில், சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் தலைவர் கிறிஸ்டோபர் வரன், இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரும், பாதுகாப்பு விவகாரப் பேச்சாளருமான கௌரவ கெஹலிய றம்புக்வெல்லவுக்கு எழுதிய பகிரங்கக் கடிதம்.

6.2 பின்னிணைப்பு 2:........................................................ 22
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்ட, 'அவசரகாலச் சட்டம் 2006ன் அறிமுகம் பற்றிய அறிக்கை' மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்தின் 'புதிய சட்டங்கள் பற்றிய அறிக்கை'.

6.3 பின்னிணைப்பு 3:........................................................ 26
' வடக்குக் கிழக்கில் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக் கைகளை அரசாங்கம் கண்டிக்கிறது' என்ற தலைப்பில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா பல்பிடா 2006 ஒக்டோபர் 27இல் வெளியிட்ட அறிக்கை.

6.4 பின்னிணைப்பு 4:........................................................ 27
கௌரவ அமைச்சரும், பாதுகாப்பு விவகாரப் பேச்சாளருமான கெஹலிய றம்புக்வெல்ல, மற்றும் கௌரவ தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷய யாப்பா ஆகியோருக்கு அறிக்கை யைச் சமர்ப்பித்து IMS சமர்ப்பித்த பகிரங்கக் கடிதம்.

7 **தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்** ................................. 29

# முதன்மைச் சுருக்கம்

2006 ஒக்டோபர் நடுப்பகுதியில்; இலங்கை ஊடகங்களின் அப்போதைய நிலையையும், இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையேயான வன்முறை அதிகரிப்பானது ஊடகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக சர்வதேசப் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திர ஸ்தாபனம் ஆகியன உண்மைகளைக் கண்டறிதல், மற்றும் ஆதரிக்கும் பணிக்குழு நடவடிக்கையைப் பொறுப்பேற்றன.

இச்சர்வதேச ஸ்தாபனங்கள் சிங்கள, ஆங்கில, தமிழ் ஊடகங்களின் அப்போதைய சூழ்நிலையைப் பரிசீலனை செய்துகொண்டிருந்த அதே நேரத்தில்; கடும் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள தமிழ் ஊடகங்களின் மீதான தொடர்ச்சியான வன்முறைகள் மீது முக்கிய கவனம் செலுத்தியது. இவ்வன்முறைச் சூழலானது வடக்கு கிழக்கில் மட்டுமன்றி நாடளாவிய ரீதியிலும் சுதந்திரமாகத் தகவல்கள் வெளிப்படுவதற்கும், மக்களின் பொது விழிப்புணர்வுக்கும் தடையாயிருந்தது. இது, வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் சமூகத்தை, வதந்திகளையும், குரோத மனப்பாங்கை வளர்க்கும் வார்த்தைப் பிரயோகங்களையும் நம்பியிருக்கவேண்டிய பலவீனமான நிலைக்கு இட்டுச் சென்றது. இவை மேலும் வன்முறைகளையும் ஸ்திரமற்ற தன்மையையும் தோற்றுவித்தன. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகத் தகவல்களை அறிக்கை செய்ய முடியாதபடி தடுக்கப்பட்டதுடன், இதன் காரணமாக பத்திரிகைச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

## பாதுகாப்புத் தொடர்பாகக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள்

பரா துருப்புக்கள், படைக் குழுக்கள் மற்றும் முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள், மிரட்டல்கள், தாக்குதல்கள் போன்றவற்றி னால் ஊடகவியலாளர்களுடைய பாதுகாப்பு நிலைமை மோசமாகிக்கொண்டிருப்பதை இந்த சர்வதேச பணிக்குழு கண்டறிந்துள்ளது. 2005 ஓகஸ்ட் இலிருந்து 9 ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதுடன், அவர்களின் மீதான கொலை அச்சுறுத்தல்கள், தொந்தரவுகள், பத்திரிகை விநியோகத்திற்குத் தடை விதித்தல் போன்ற பல சம்பவங்கள் தொடர்ந்தன. இதற்கும் மேலாக நடந்த சில சம்பவங்களில் கொலை செய்தவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுவோருடைய அடையாளங்கள் அறியப்பட்ட நிலையிலும் கூட சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அல்லது மிகக் குறைந்தளவு நடவடிக்கைகளையே எடுத்தன. பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிப்போர் ‘துரோகிகள்’ அல்லது ஏதோ ஒரு தரப்பின் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தப்பட்டதுடன், தனிப்பட்டவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில், அவர்கள் மீதான அச்சுறுத்தும் துவேஷப் பேச்சுக்களை ஏற்றுக்கொள்ளும் நிலைமை பொதுவாக எங்கும் பரவியிருந்தது. இதன் விளைவாகப் பல ஊடகவியலாளர்கள் ஆறு மாதங்களுக்கு மேலும் கூடத் தலைமறைவாகியுள்ளனர். சிலருடைய குடும்பத்தினருக்கும் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## வெளிப்படையாக அறிவிக்கப்படாத தணிக்கை தொடர்பாகக் கண்டறியப்பட்டவை

தணிக்கைமுறை அமுலிலிருந்தபோதிலும் அது பெருமளவுக்கு மறைமுகமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தின் வழியோடு ஒத்துப்போக மறுப்பவர்கள் துரோகிகள் அல்லது உளவாளிகள் என முத்திரை குத்தப்பட்டனர். இத்தாக்குதல்களைக் கண்டிக்கவும், சுய தணிக்கைக்கு எதிராகக் குரல்கொடுத்து கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு ஆதரவாகப் பேசவும் தயாராகவிருக்கும் அரசியல்வாதிகளுக்கு, அது ஒரு உயிராபத்தான செயற்பாடாகவே அமைந்தது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பொன்றின்போது, பத்திரிகைத் தணிக்கை செய்யவேண்டுமென்பதில் இராணுவம் ஆர்வமாயிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்ததும், ‘சேகரிக்கப்பட்ட செய்திகள் அனைத்தும் முதலில் பரிசீலிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட

வேண்டும்' என 20.9.2006 அன்று பாதுகாப்பு அமைச்சிடமிருந்து எல்லா ஊடக நிறுவனங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டதும் தணிக்கையை அமுல்படுத்தும் நடவடிக்கைகளாகவே, அவற்றின் நோக்கம் அதுவாக இல்லாதிருப்பினும், கருதப்படவேண்டியிருக்கிறது. மேலும், அரசாங்கத்திற்கு ஆதரவாயிருக்கும் ஊடக நிலையங்களுக்கே உத்தியோகபூர்வத் தகவல்கள் வழங்கப்படும் என்றதொரு கட்டுப்பாடும் வழக்கத்தில் இருந்து வருகிறது.

செயற்கைக்கோள் தொலைக்காட்சிச் சேவைகள்(Sattelite Television Services) அரசாங்கத்தினால் மூடப்பட்டமையானது, வெளிநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்வையிடும் பொதுமக்களுக்கான வசதியைப் பாதித்தது. தெரிந்தெடுக்கப்பட்ட திரைப்படங்கள் தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றைத் தடை செய்வது, உள்ளூர்த் திரைப்படங்களை வெளிநாடுகளில் காட்டுவதற்குத் தடைசெய்வது, அவைகளுக்குச் சான்றிதழ் வழங்கும் விவகாரங்களில் தலையிடுவது போன்றன எல்லாமே வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதிக்கும் செயல்கள்தான்.

## ஊடகக் கொள்கைத் திருத்தங்கள் தொடர்பில் கண்டறியப்பட்டவை

18.8.2005ல் ஏற்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் இன்னமும் நடைமுறைக்கு வராவிட்டாலும், ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் அரசாங்கத்திற்கு முன்னர் இருந்துவந்த அதிகாரங்களை மேலும் பரந்தளவாக்கியுள்ளது. உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தின்படி (The official secrets act-OST), 'உத்தியோகபூர்வத் தகவல்களை' வெளியிடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனால் இது தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இத்துடன், 1973ல் உருவாக்கப்பட்ட பத்திரிகைப் பேரவைச் சட்டமானது (Press Council law), அமைச்சரவை முடிவுகள், அமைச்சரவைக்குரிய ஆவணங்கள், சில குறிப்பிட்ட பாதுகாப்பு விஷயங்கள் மற்றும் நிதி சம்பந்தமான விடயங்களை வெளியிடுவதைத் தடைசெய்கிறது.

இன்னமும் அமுல்ப்படுத்தப்படாவிட்டாலும், இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் மூலமாக ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அரச கட்டுப்பாட்டு நடைமுறைகளை கடந்த ஜூனில் அரசாங்கம் மீளவும் அறிமுகப்படுத்தியிருக்கிறது. கடந்த டிசம்பர் 6ல் அரசாங்கம் 'அவசரகாலச் சட்டத்தை' (பயங்கரவாதத் தடுப்பு மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கைகள்) அறிமுகப்படுத்தியபோது, அது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமெனப் பல பொது அமைப்புக்கள் பரவலாக விமர்சனம் செய்துள்ளன.[1]

2003ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்ட தகவல் வெளியிடும் சுதந்திரம் தொடர்பான சட்டமூலம் அரசாங்கத்தால் இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. இந்நாட்டின் ஒலிபரப்புச் சட்டக்கோப்பானது, தனியார் மற்றும் பொது ஒலிபரப்பாளர்களுக்குரிய சுதந்திரத்தை அளிக்கத் தவறிவிட்டது. பொது அல்லது அரச ஒலிபரப்பாளர்கள் ஆசிரியபீட சுதந்திரம் இல்லாதிருப்பதோடு பொதுமக்கள் சேவை ஊடகக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறு அவர்கள் கோரப்படுவதில்லை. ஊடகப்பிரிவின் மீதான அதனது உரிமையைப் பிரித்தெடுக்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டபோதும், பல ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் அதனைப் பிரதிபலித்தபோதும், அரசாங்கம் 'லேக் ஹவுஸ்' என அழைக்கப்படும் 'இலங்கைப் பத்திரிகை நிறுவனத்தை'த் (ANCL) தனது கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கிறது.

*1 மாற்றுக்கொள்கைகளுக் கான நிலையம் வெளியிட்ட, 'அவசரகாலச் சட்டம் 2006ன் அறிமுகம் பற்றிய அறிக்கை' மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்தின் 'புதிய சட்டங்கள் பற்றிய அறிக்கை'யைப் பார்க்கவும்.*

*2 இலங்கையின் இன விகிதாசாரமானது 74% சிங்களவர்கள், 12% இலங்கைத் தமிழர்கள், 6% இந்தியத் தமிழர்கள், 6% மூர்கள், மற்றும் 1% பேகர்கள், மலாயர் மற்றும் வேடுவர்களைக் கொண்டமைந்துள்ளது. மத ரீதியாக 69% பௌத்தர்கள், 15% இந்துக்கள், 8% கிறிஸ்தவர்கள், 8% முஸ்லிம்களை அது கொண்டிருக்கிறது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய எல்லாமே உத்தியோகபூர்வ மொழிகளாக உள்ளன. 'ஆசியாவின் ஊடகம் தொடர்பான கையேடு' (New Delhi, Sage Publications, 2000).*

# 1 அறிமுகம்

## 1.1 இலங்கைக்கான சர்வதேசப் பத்திரிகைச் சுதந்திரப் பணிக்குழு

2006 ஒக்டோபர் 9 இலிருந்து 11 வரையில், சர்வதேச பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் ஊடக அபிவிருத்தி அமைப்புக்கள் பலவற்றைக் கொண்ட சர்வதேசப் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திர பணிக்குழு (பொதுவாகச் 'சர்வதேசப் பணிக்குழு' என்றும் குறிப்பிடலாம்), இலங்கையில் உண்மை நிலையைக் கண்டறிந்து ஆதரவழிக்கும் பணிக்குழுச் செயற்பாட்டைப் பொறுப்பேற்றிருந்தது.

இக்கடமையில் ஈடுபட்டு, இந்த அறிக்கையை வெளியிட்ட 5 நிறுவனங்களாவன: சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு(IFJ), சர்வதேச ஊடக அனுசரணை, சர்வதேசப் பத்திரிகை நிறுவனம், சர்வதேச செய்திப் பாதுகாப்பு நிலையம், மற்றும் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாச்சாரத்திற்கான நிறுவனம்.

இக்குழுவின் நோக்கம் என்னவெனில்; இலங்கை ஊடகங்களின் அப்போதைய நிலையையும், இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் ஊடகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் ஆராய்வதுதான்.

இந்த நடவடிக்கையின்போது; இலங்கையின் ஊடக சமூகத்தினரிடையேயான உறவையும், பேச்சுவார்த்தையையும் உறுதிப்படுத்தவேண்டும் என்று இந்த அமைப்புக்கள் வேண்டியது டன், நாட்டில் காணப்படும் ஊடகம், மற்றும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான நிலைமை குறித்த தனது தீவிரமான அக்கறையை போரில் ஈடுபட்டிருக்கும் தரப்பினருக்கும், சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தின. ஒரு ஜனநாயக நாட்டிலுள்ள சமுதாயத்திற்குப் பத்திரிகைச் சுதந்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரமும் மிகவும் அவசியமென்றும், இலங்கையில் நிரந்தர சமாதானத்தைக் கட்டியெழுப்ப இவை அடிப்படை மூலங்கள் எனவும் அந்த ஸ்தாபனங்கள் வலியுறுத்தின.

இவ்விலக்குகளை அடைவதற்காக இந்தச் சர்வதேசக்குழுவானது, ஊடகங்களின் அப்போதைய நிலை மற்றும் கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் பற்றி, செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள், ஊடக உயர் அதிகாரிகள், சட்ட நிபுணர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள், அரசியல்கட்சி உறுப்பினர்கள், பாதுகாப்புப் படையினர் மற்றும் வெளிநாட்டுச் சமூகத்தினர் உள்ளிட்ட, பரந்துபட்ட வித்தியாசமான கோணங்களில் கருத்துக்களைப் பிரதிபலிக்கக்கூடிய பல ஸ்தாபனங்கள் மற்றும் தனிநபர்களைச் சந்தித்தது. இப்பிரதிநிதிகளில் பின்வருவோர் அடங்குவர்.

### சர்வதேசப் பணிக்குழுவின் பரந்த கூட்டமைவு

சர்வதேச பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரப் பணிக்குழு என்ற பெயரில் பொறுப்பேற்கப்பட்ட இந்தப் பணிக்குழுவின் நடவடிக்கை, பின்வரும் சர்வதேச அமைப்புக்களின் முறைசாரா கூட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டது.

- 19ஆவது பிரிவு (Article19)
- ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு (Committee to Protect Journalist-CPJ)
- சுதந்திரக் குரல் (Free Voice)
- சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு (International Federation of Journalist)
- சர்வதேச ஊடக அனுசரணை (International Media Support)
- சர்வதேசப் பத்திரிகைச் சங்கம் (International Press Institute)
- சர்வதேசச் செய்திப் பாதுகாப்புச் சங்கம் (International News Safety Institute)
- எல்லைகளற்ற செய்தியாளர்கள் (Reporters Without Boarders)
- தெற்காசியப் பத்திரிகை ஆணைக்குழு (South Asia Press Commission)
- ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனம் (UNHCR)
- சமூக வானொலி ஒலிபரப்பாளர்களுக்கான சர்வதேசச் சங்கம் (World Association of Community Broadcasters)

- செய்திப் பத்திரிகைகளின் உலகக் கூட்டமைப்பு (World Association of Newspapers)
- உலகச் சுதந்திரப் பத்திரிகையாளர்கள் குழு (World Press Freedom Committee)

## 1.2 அறிக்கைக் கட்டமைப்பு

இவ்வறிக்கையானது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் பத்திரிகை மற்றும் ஊடகச் சுதந்திரங்களின் நிலைமைகள் பற்றிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களை விளக்குகின்றன. நடந்த சம்பவங்கள் பற்றிய முழுப் பட்டியலையும் இவ்வறிக்கை தராதபோதும், நடைமுறைப் பாதுகாப்பு நிலைமைகளுடன் தொடர்புடைய சம்பவங்களில் பொருத்தமானவற்றை பணிக்குழு விபரித்திருக்கிறது.

இவ்வறிக்கை பின்வரும் விடயங்களை முக்கியமாக நோக்கியுள்ளது:

- பாதுகாப்பும் தண்டனையிலிருந்து விடுபடுதலும்
- தணிக்கை
- ஊடகக் கொள்கைச் சூழல்

இவ்வறிக்கை சம்பந்தமாக மேலதிக தகவல்களை நீங்கள் அளிக்க விரும்பினாலோ அல்லது இந்தப் பணிக்குழு நடவடிக்கை பற்றி மேலதிக தகவல்களை அறிய விரும்பினாலோ தயவுசெய்து இதில் பங்குபற்றிய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவும் (தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்கள் இவ்வறிக்கையின் முடிவில் உள்ளன)

## 1.3 பொதுவான பின்னணி

கடந்த இரு தசாப்தங்களாக இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் ஈடுபட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கமானது; நாட்டின் வடக்கு கிழக்கிலுள்ள சிறுபான்மைத் தமிழருக்காகத் தனியான ஒரு நாடு உருவாக்குவதற்காக 1976ல் தோற்றுவிக்கப்பட்டது.[2]

1983ல் இந்த முரண்பாடு வன்முறையாக உருவெடுத்ததிலிருந்து விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்துடன் அவ்வப்போது போரில் ஈடுபட்டு வந்தனர். கடந்த இரு தசாப்தங்களாக தொடரும் இந்த முரண்பாடானது, பொதுமக்கள் மற்றும் இராணுவம் உட்பட ஏறக்குறைய 70,000 உயிர்களைப் பலியெடுத்துள்ளதுடன்[3] 700,000 மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்துள்ளமைக்கும் காரணமாகியுள்ளது.[4]

2001ல் இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தனித்தனியாகவும் ஒருதலைப்பட்சமாகவும் போர்நிறுத்தத்தை அறிவித்ததனால், ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்குரிய சூழல் அமைந்து, அது பெப்ரவரி 2002ல் அமுலுக்கும் வந்தது. அதைத்தொடர்ந்து செப்டெம்பர் 2002ல் இவ்விரு தரப்பினருக்குமிடையே பேச்சுவார்த்தை ஆரம்பமானது. வன்முறைகள் இடம்பெற்றபோதிலும் 2002ன் போர்நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், ஏப்ரல் 2003ல் பேச்சுவார்த்தை முற்றுமுழுதாக ஸ்தம்பித்தது. 2005 நவம்பர் தேர்தலில் கடும்போக்குவாதியான ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும், விடுதலைப் புலிகளுடனான சமாதானத்தை அது மேலும் பாதித்தது.

ஏப்ரல் 2006 இலிருந்து, போர்நிறுத்தம் என்பது வெறும் பெயரளவிலேயே நிலைக்கும் சூழ்நிலை ஏற்படும் அளவுக்கு நிலைமை வெகு விரைவாக மோசமாகிக்கொண்டு போனது. பெப்ரவரி 2006 ஜெனீவாப் பேச்சுக்களின்போது, இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் 2002 போர்நிறுத்தத்தை மதிப்பதாகக் கூறியபோதும், அதே வருடம் ஏப்ரலில் திருகோணமலையிலும் அதைச்சுற்றிய பிரதேசங்களிலும் வன்முறைகள் தலைதூக்கின.

போர் மிகக் கடுமையான நிலையிலிருந்த யாழ் குடாநாட்டில் 100,000 பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். சரியான புள்ளிவிபரங்கள் வெளியிடப்படாதபோதும், அதிகளவிலான மனித உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

டிசம்பர் 6ல் இலங்கை அரசாங்கம், பயங்கரவாதத்திற்கெதிரான சட்டங்களை அறிமுகப்படுத்தியதன்மூலம், பாதுகாப்புப் படையினருக்கு தேடுதல், கைது செய்து விசாரணைக்குட்படுத்தல்[5] போன்ற விடயங்களின் பரந்தளவிலான அதிகாரங்கள் கிடைத்தன. இந்தப் பயங்கரவாதத்திற்கெதிரான சட்ட நடைமுறைகள், 2002 போர்நிறுத்தத்திற்கு முன்னர் 'பயங்கரவாதத் தடைச்சட்ட'த்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.[6]

*3 'இலங்கையில் மனித உரிமைகள் பற்றிய அறிக்கை-2001'(அமெரிக்க உள்நாட்டு அலுவலகம்- ஜனநாயக சபை, மனித உரிமைகளும் தொழிலும். மார்ச்2002).*

*4 குறிப்பாக, பல தமிழர்கள் இலங்கையிலிருந்து வெளியேறி தென்னிந்தியாவின் தமிழ்நாட்டு மாநிலத்திற்குச் சென்றனர். அங்கு இப்போது ஏறக்குறைய 65,000 தமிழ்மக்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்திருக்கிறார்கள். (மனித உரிமைக் கண்காணிப்பு- உலக அறிக்கை-இலங்கை).*

*5 பயங்கரவாதத்திற்கெதிரான சட்டத்திற்காக இலங்கையின் அழைப்பு (பி.பி.சி உலகசேவையின் வலையமைப்பு, 6 டிசம்பர் 2006).*

*6 பயங்கரவாதத் தடைச் சட்டமானது மீளவும் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதா? அப்படி இருக்கும் பட்சத்தில் அதில் எந்தப் பிரிவுகள் இப்போது நடைமுறையில் உள்ளன என்பது தெளிவாகவில்லை. டிசம்பர் 6 இன் புதிய 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது, பயங்கரவாதத் தடைச் சட்டமல்லவெனினும், ஜனாதிபதியும் பிரதம மந்திரியும் 'பயங்கரவாதத் தடைச் சட்ட'த்தை மீளவும் அறிமுகப்படுத்தும் திட்டம் பற்றிக் குறிப்பிடுவதால் சிறிது குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. எனினும், அது மீண்டும் அமுலுக்கு வந்திருக்கிறது என்பதை நிரூபிக்கும் ஆவணங்கள் எதுவும் கிடைப்பனவாக இல்லை.*

# 2 பாதுகாப்பும் தண்டனையிலிருந்து விடுபடுதலும்

சர்வதேச பணிக்குழு சந்தித்த மனித உரிமைகள் ஆதரவாளர்களின் கருத்துப்படி, 2006 ஆம் ஆண்டானது; ஆயிரக்கணக்கான இடப்பெயர்வுகள், அகதிகள், காணாமல்போவோர், மரணங்கள், உயர்மட்டக் கொலைகள் இடம்பெற்ற, பெரும் துயரத்தைக் கொடுத்த ஒரு ஆண்டாகும். கடந்த ஒன்றரையாண்டுகளில் ஒன்பது ஊடகப் பணியாளர்கள் கொலை செய்யப்பட்ட பின்னரும் அவர்கள் -முக்கியமாகத் தமிழ்ப் பத்திரிகையாளர்கள்- மீதான தாக்குதல்கள் எந்தளவிலும் குறையவில்லை. இதே மாதிரியான தன்மையில் ஊடகங்களுக்கும் அதனைச் சார்ந்தோருக்கும் கொலை மிரட்டல்களும் வேறு வகையிலான அவமதிப்புக்களும்-முக்கியமாக பத்திரிகைகளை விநியோகித்தவருக்கெதிரான தாக்குதல்- தொடர்ந்தவண்ணமேயிருக்கின்றன.

கடந்த ஒன்றரை வருடத்தில் கொலைசெய்யப்பட்ட ஊடகச் செயற்பாட்டாளர்களின் பட்டியல்:

### தர்மரத்தினம் சிவராம் - 2005 ஏப்ரல் 29

தர்மரத்தினம் சிவராமின் உடல் இலங்கைப் பாராளுமன்ற வளாகத்தினருகேயுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அடையாளம் காணப்படாத ஒரு கும்பல் முதல் நாள் அவரை ஒரு உணவு விடுதிக்கு வெளியால் இரவு 10.30 மணியளவில் கடத்தியது. சிவராமின் உடல் கண்டு பிடிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயமானது, பாதுகாப்புப் படைகளால் மிகக் கவனமாகக் காவல் புரியப்படுகிறது. இது பல உள்ளூர் அமைப்புகள் அரசாங்கத்தின் மீது பழிகூறக் காரணமாயிருந்தது. ‘தராகி’ என்ற புனைபெயர் கொண்ட சிவராம், ‘த டெய்லி மிரர்’ ஆங்கிலப் பத்திரிகையில் அரசியல் பத்தி எழுதி வந்ததுடன், தமிழ்நெற்.கொம் இணையத்தளத்தின் ஆசிரியர் குழுவில் உறுப்பினரா கவுமிருந்தார். அவர் இலங்கை அரசாங்கத்தை வெளிப்படையாக விமர்சிப்பவராகவுமிருந்தார்.

### ரேலங்கி செல்வராஜா- 2005 ஓகஸ்ட் 12

ரேலங்கி செல்வராஜாவும் அவரது கணவரும் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் மதியம் 1 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டியில் சுட்டுக்கொல்லப்பட்டனர். செல்வராஜா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் தொலைக்காட்சித் தொகுப்பாளராக முன்னர் வேலை பார்த்துப் பின்பு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஊடகவியலாளராக பணிசெய்து வந்தார்.

### சுப்பிரமணியம் சுகிர்தராஜன் - 2006 ஜனவரி 24

திருகோணமலைத் துறைமுகத்தில் வேலை பார்த்தவரான சுகிர்தராஜன் ஒரு ஊடக வியலாளராகவும் இருந்தார். காலையில் வேலைக்குப் போவதற்குப் பேரூந்துக்காகக் காத்திருக்கும்போது அவர் சுடப்பட்டார். இவர் திருகோணமலையில் இராணுவம் மற்றும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை விமர்சித்துப் படங்களையும் செய்தி அறிக்கைகளையும் ‘சுடர் ஒளி’ப் பத்திரிகையில் பிரசுரித்தார். கடந்த ஜனவரி இரண்டாம் திகதி கொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களது படங்களை இவர் பிரசுரித்ததால், அம்மாணவர்கள் ‘கிரனேட்’டால் கொல்லப்பட்டனர் என்ற மூல அறிக்கை தவறானது என்பதை மறுத்துரைப்பதற்கு மிகவும் உதவியது.

### சுரேஷ்குமார், ரஞ்சித்குமார் - 2006 மே 03

‘உலகப் பத்திரிகைச் சுதந்திர தினத்’தைக் கொண்டாடுவதற்காகக் கொழும்பில் ஊடகவியலாளர்கள் கூடியிருந்த சமயத்தில், யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகைக் காரியாலயம் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டது. அப்பத்திரிகையின் சந்தைப்படுத்தல் முகாமையாளரான சுரேஷ்குமாரும், விநியோகப் பிரிவைச் சேர்ந்த ரஞ்சித்குமாரும் இதன்போது கொல்லப்பட்டனர். ஐந்து பேர் காயமடைந்தனர். அக்காரியாலயமும் சேதமாக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் ஆறு பேரைக் கைது செய்தனர். ஆனாலும் அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பிடிக்கப்பட்ட ஆறு பேருக்கும் நடந்த சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்று யாழ்ப்பாணத்தில் சிலரால் குற்றஞ்சாட்டப்பட்டது.

**லக்மல் டி சில்வா - 2006 ஜுலை 02**
சுதந்திரச் செய்தியாளரான சம்பத் லக்மல் டி சில்வா, 2006 ஜுலை 2ஆம் திகதியன்று இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் அன்று காலை 5மணியளவில் அவரது பெற்றோரின் கொழும்பு தெற்கு, பொரலஸ்கமுவ வீட்டிலிருந்து கடத்தப்பட்டார். பின்னர் அங்கிருந்து 3கிலோ மீற்றர் தூரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். தனக்கு நெடுங்காலம் பழக்கமான சில இராணுவத்தினரைப் பார்க்கச் சென்றதாக அவரது தாயார் கூறினார்.

**மரியதாஸ் மனோஜன்ராஜ் - 2006 ஓகஸ்ட் 01**
செய்திப் பத்திரிகை விற்பனையாளரான மரியதாஸ் மனோஜன்ராஜ் 2006 ஜுலை 27 அன்று, விநியோகிப்பதற்கான பத்திரிகைகளை வாங்க யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது, நிலக்கண்ணிவெடியினால் கொல்லப்பட்டார். தமிழ்ப் பத்திரிகை விநியோகஸ்தர்களுக்கு முன்னதாகவே பல கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

**சதாசிவம் பாஸ்கரன் - 2006 ஓகஸ்ட் 16**
யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் 'உதயன்' பத்திரிகையின் சாரதியாகவும் விநியோகஸ்தராகவும் பணியாற்றிவந்த சதாசிவம் பாஸ்கரன், தற்காலிகமாக ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட நேரத்தில் பத்திரிகைப் பிரதிகளை விநியோகிப்பதற்காகச் சென்றபோது, அவரது வாகனத்தில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார். மிகவும் தெளிவான எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த வாகனத்தில் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப்பகுதியினூடாகப் போய்க்கொண்டிருந்த வேளையிலேயே இவர் சுடப்பட்டார். இவர் இராணுவத்தினரால் சுடப்பட்டதாகத் 'தமிழ்நெற்' இணையத்தளம் தெரிவிக்கிறது.

**சின்னத்தம்பி சிவமகாராஜா - 2006 ஓகஸ்ட் 21**
யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்படும் 'நமது ஈழநாடு' பத்திரிகையின் நிர்வாக இயக்குனரான சின்னத்தம்பி சிவமகாராஜா தெல்லிப்பளையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இக்கொலையையடுத்து 'நமது ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயம் மூடப்பட்டது.

கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தமதும் தமது குடும்பத்தினரதும் பாதுகாப்புக்காகத் தமது அலுவலகங்களிலும் மற்றும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் மறைந்து வாழ்கின்றனர். மேலும் சிலர் பொலிஸ் பாதுகாப்பை நாடியபோதும், தமக்குக் காவலாக வருபவர்களால் தாம் கண்காணிக்கப்படுவதாகவும் அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் வாகன வசதிகளையும் தாமே வழங்கவேண்டியிருப்பதாகவும் முறையிடுகின்றனர். அத்துடன், அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்களை வெளியிடும் ஊடகவியலாளர்களின் நடவடிக்கைகள் பாதுகாப்புப் படையினரால் கண்காணிக்கப் படுகின்றன என்று 'சர்வதேச பணிக்குழு'விற்கு அறியத்தரப்பட்டிருக்கிறது.

தமக்கு விடுக்கப்படும் மிரட்டல்கள் குறித்து பொலிஸார் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு அறிவிப்பதில் ஊடகவியலாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ்ப் பத்திரிகைக் காரியாலயம் ஒன்றினுள் அனுமதியின்றி நுழைந்த ஆயுததாரிகள் சிலரை பொலிஸார் பிடித்த பின்னர், அவர்கள் தம்மை இராணுவ உளவாளிகள் என்று காட்டிக்கொண்டதையடுத்து உடனடியாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இராணுவத்தினர் பொதுவாகத் தாமே பெரும் அதிகாரங்களையெடுத்துக் கொண்டு செயற்படுவதோடு, கொழும்பு இராணுவத் தலைமையகத்திலிருக்கும் தமது மேலதிகாரிகளின் கட்டளைகளுக்குப் பெரும்பாலும் கீழ்ப்படிவதில்லை.

இப்படித் தொடர்ந்து வரும் துன்பங்களைக் குறைக்கக்கூடிய தற்காப்புப் பயிற்சிகள், வரக்கூடிய அபாயங்களை முன்னரே அறிந்து கொள்ளல், செய்தி மற்றும் ஊடக உரிமையாளர்களின் ஆதரவு என்பவற்றுடன் ஊடகவியலாளர்களிடையே தமிழ் சிங்களப் பிரிவினையைத் தடுக்கக்கூடிய முறைசாரா பாதுகாப்பு வலைப்பின்னலை ஏற்படுத்தல் போன்ற நுட்பங்கள் குறைந்ததால் தான் சூழ்நிலை மேலும் மோசமாகிக்கொண்டே போகிறது. பல தமிழ் ஊடகவியலாளர்கள் தாம் எந்த நேரமும் கைதுசெய்யப்படலாம் என்ற பயத்துடனேயே பயணம் செய்கின்றனர். அத்துடன், தமது குடும்பத்தினருக்கோ நண்பர்களுக்கோ தாம் எங்கே போகிறோம் எங்கே இருக்கிறோம் என்ற விபரங்களை அறிவிக்காமலிருப்பதானது, அவர்களை மேலும் ஆபத்திற்குட்படுத்துகிறது.

Prolonged trauma and stress disorder(PTSD) என்று சொல்லப்படும் ‘துன்பநீடிப்பு மற்றும் மன அழுத்தக் கோளாறு’ இவ்வூடகச் செயற்பாட்டாளர்களைப் பாதிப்பதும் அதற்கேற்ற முறையான ஆதரவு அவர்களுக்கின்மையும் மிகவும் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம். (சர்வதேச பணிக்குழு நேர்முகங்கண்ட பல ஊடகவியலாளர்கள்; ‘மக்களின் அறிந்துகொள்ளும் உரிமைக்காகத் தாம் செய்யும் கடமையை விட்டுக்கொடுக்க முடியாது’ எனத் தம்மை எதிர்கொள்ளும் இவ்வாபத்துக்கள் குறித்து அசட்டையாக இருக்கின்றனர்).

சர்வதேச பணிக்குழுவிற்குக் கிடைத்த அறிக்கைகளின்படி; நடந்த சம்பவங்கள், கொலைகள் பற்றி உரிய அதிகாரிகள் முழுமையாக விசாரணை செய்யவும், பொதுமக்கள் தரப்பிலிருந்து கிடைக்கும் அறிக்கைகளைப் பார்வையிட்டு விசாரிக்கவும் தயங்குகிறார்கள். இதுபற்றி சர்வதேச பணிக்குழு மிகவும் கவலையடைந்துள்ளது. சில சம்பவங்களைப் பொறுத்தவரையில்; கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை இனங்காண்பதற்கு உதவக் கூடிய வகையில் அவர்கள் பற்றிய முழு விபரங்களும் கொடுக்கப்பட்டும் அதிகாரிகள் இதுதொடர்பில் எந்தவொரு முயற்சியும் செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக, தர்மரத்தினம் சிவராமின் கொலையைப் பொறுத்தவரையில் பொலிஸார் புலிகளுக்கெதிரான இயக்கமொன்றைச் சேர்ந்த ஒருவரைக் கைதுசெய்ததாகச் சொல்லப்பட்டபோதும், பின்னர் மேற்கொண்டு எந்த முன்னேற்றமும் தெரிவிக்கப்படவில்லை. சுரேஷ்குமார், ரஞ்சித்குமார் இருவரின் கொலையில் சம்பந்தப்பட்ட ஒருவரின் பெயர் விபரம் பொலிஸிடம் கொடுக்கப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் இந்தச் சூழ்நிலையானது; அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட தண்டனை யிலிருந்து விடுபடுதல் என்ற ஒரு வழக்கத்தைச் சுற்றியமைந்த பெரும் பிரச்சினையின் ஒரு பகுதியாகக் காணப்படுகிறது. சர்வதேச பணிக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்ட பல மனித உரிமை மீறல் சம்பவங்கள், அதிகாரத்துக்குரியவர்களால் பாரதூரமாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதனால், இலங்கை அரசாங்கம் இந்தப் படுமூர்க்கமான மனித உரிமை மீறல்களைப் பாரதூரமாக எடுத்துக்கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கை குறைவடைந்து செல்கிறது.

ஊடகவியலாளர்களின் கொலைகளைப் பற்றிய கேள்விகள் குறிப்பாக பாதுகாப்பமைச்சின் பேச்சாளரான கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் கேட்கப்பட்டது. ஒன்பது ஊடகவியலாளர்கள் கடந்த 18 மாத காலத்தினுள் கொல்லப்பட்டதை அவர் மறுத்து, தனக்குத் தெரிந்தவரையில் இரண்டு பேர் மட்டுமே கொலை செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்.

சர்வதேச ஊடகவியலாளர்கள் கூட்டமைப்பு 2006 ஒக்டோபர் 25இல் கொடுத்த தகவல்களின்படி, கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் முழுவிபரங்கள் மற்றும் கொலை செய்யப்பட்ட தன்மை, பின்னணி போன்ற மேலதிகத் தகவல்களைக் கொடுப்பதற்கு ‘சர்வதேச பணிக்குழு’ முயற்சிகளை மேற்கொண்டது. (‘இலங்கையின் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளல் நிறுத்தவேண்டும்’ -தெற்காசிய ஆசிரியர் குழுவின் கடிதம் என்ற பின்னிணைப்பைப் பார்க்கவும்.)

எல்லாவிதமான குற்றச்சாட்டுக்களும் முறைப்படி விசாரிக்கப்படும் என்று பாதுகாப்புப் பேச்சாளர் ‘சர்வதேச பணிக்குழு’விடம் உறுதியளித்தார். இந்த விடயங்கள் பற்றிப் பேசுவதற்குத் தாம் தயாராகவிருப்பதாகவும், சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் முறையாக விசாரிக்கப்படுவது மட்டுமன்றி, அவை ஒவ்வொன்றும் தகுந்தபடி தொடர்ந்து கொண்டுசெல்லப்படும் என்றும் அவர் கூறினார். இதன்படி, விசாரணைகளின் முன்னேற்றங்கள் சம்பந்தமான அறிக்கைகள் வரும் எனக் கொள்ளலாம். (2007 ஜனவரியில் இந்த வெளியீடு மேற்கொள்ளப்படும் வரையில் அவ்வாறான அறிக்கை எதுவும் வழங்கப்படாத போதிலும்).

தனிப்பட்டவர்கள் அதிகளவில் இலக்குவைக்கப்படும் ஒரு சூழ்நிலையில், சட்டத்துக்குப் புறம்பான கொலைகளையும் ஏனைய வன்முறைகளையும் செய்வோர் அதற்குரிய தண்டனைகளிலிருந்து தப்பிக்கொண்டே வருவதானது, வன்முறைகளை ஊக்குவிக்கும் ஒரு செயற்பாடு என்று சர்வதேச பணிக்குழு கவலை கொள்கிறது. அரசியல் சம்பந்தமான வன்முறைகளை அதிகாரிகள் விசாரணை செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையானது, வன்முறையாளர்கள் தம் விருப்பப்படி காரியங்கள் செய்வதற்கு மேலும் ஊக்கத்தையே கொடுக்கும்.

இப்படியான நடவடிக்கைகள் பத்திரிகையாளர்கள், ஊடக சமூகத்தினர், ஊடகச் செயற்பாட்டாளர்கள் மீது மட்டும் மேற்கொள்ளப்படும் ஒன்றாக இருப்பதாகக் கூற முடியும் என்றாலும், அரசியல் முரண்பாடுகள் தொடர்பாக அறிக்கை செய்து தமது உச்சபணியைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படும்போது அவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்கவேண்டியேற்படுகிறது. சிக்கலுக்குரிய விடயங்களை அறிக்கைசெய்ய வேண்டிய சூழ்நிலைகளில் இது வெளிப்படையாக அவதானிக்கப்படும் ஒரு விடயமாக இருந்துவருகிறது. தடையேதுமின்றி ஒரு ஊடகவியலாளரை வீடுதேடி வந்து பதிலடி கொடுக்க முடியுமெனில், அத்தீயசக்தியானது அரசியல் வன்முறையில் ஈடுபடுவதையும் இது ஊக்குவிப்பதாகவே அமையும்.

தண்டனையிலிருந்து தப்பும் இக்கலாச்சாரத்தை அதிகாரிகள் தாம் எடுக்கும் அதி விரைவான முடிவுகளாலும், வலுவானதும் பொருத்தமானதுமான விசாரணைகளால் நிறுத்தியும், அரசியல் வன்முறைச் சம்பவங்களைக் குறைக்கவும் முடியுமெனில், அது அரசியல் வன்முறைகளைக் குறைப்பதற்கு உதவ முடியும்.

இப்படியான பிரச்சினைகள் வெளிச்சத்திற்கு வரும் வேளையில்; வடக்குக் கிழக்கிலுள்ள ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள் வருந்தத்தக்கதென்பதுடன் எந்தவொரு தனி நபரோ குழுக்களோ ஊடகங்களைத் தாக்குவதையோ அவமானப் படுத்துவதையோ அரசாங்கம் பொறுத்துக்கொள்ள முடியாது.[7] என்று இலங்கை அரசாங்கத்தின் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் (Director of Government Information) அனுஷா பல்பிட வெளியிட்டுள்ள அறிக்கையை 'சர்வதேச பணிக்குழு வரவேற்றுள்ளது. ஜனாதிபதியின் வேண்டுகோளின்படி, 'இச்சம்பவங்கள் பற்றிய முழுமையான விசாரணை' 'மிக விரைவிலேயே' மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ்மா அதிபர் சொல்லியிருப்பது பற்றிய மேலதிக விபரங்களை அறியவும் சர்வதேச ஸ்தாபனம் ஆவலாகவுள்ளது.

அத்துடன், 2006 டிசம்பர் 23இல் எடுக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் 1738ஆவது தீர்மானத்தை சர்வதேச பணிக்குழு வரவேற்றுள்ளதுடன் அது இலங்கைக்கு எப்படிப் பொருத்தமாகும் என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. இக்கருத்தினடிப்படையில், ஊடகவியலாளர்களுக்கெதிரான தாக்குதல்களைக் கண்டித்தும், சர்வதேசச் சட்டத்தின்படி வன்முறைகள் புரிந்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டிய அவசியத்தையும், சர்வதேசச் சட்டங்களின்படி தண்டனையிலிருந்து தப்புதல் பற்றி எல்லா நாடுகளும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டிய கடமைகள் குறித்தும், ஊடகவியலாளர்களின் தொழில் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மதிக்கவேண்டிய அவசியத்தையும் இத்தீர்மானம் வலியுறுத்துகிறது.

*7 பின்னிணைப்பு 3ஐப் பார்க்க: 'வட கிழக்கில் ஊடகச் சுதந்திரத்தை ஒடுக்க முயலும் முயற்சிகளை அரசாங்கம் கண்டிக்கிறது'- ஒக்டோபர் 2006ல் அரசாங்கத் தகவல்கள் திணைக்கள பணிப்பாளர் வெளியிட்ட அறிக்கை*

# 3 தணிக்கை

தணிக்கையைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட ஊடகத்தின் வகை, அவர்களுடைய மொழி, அவர்களுடைய புவியியல் அமைவிடம் என்பவற்றைப் பொறுத்து, மிகவும் சிக்கலான ஊடகச் சூழ்நிலை இலங்கையில் காணப்படுகிறது என்பதைச் 'சர்வதேச பணிக்குழு' அவதானித்துள்ளது. அத்துடன், நேரடியாகவோ, மறைமுகமாகவோ இத் தணிக்கைகளைச் செய்பவர்களுள், அரசாங்கத்திலிருந்து, நாடாளுமன்ற அங்கத்தவர்கள், சமூகக்குழுத் தலைவர்கள், பாதுகாப்புப் படைகள், விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய ஆயுததாரிகள் வரையில் பல தரப்பினரும் அடங்குவர்.

பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக ஊடகங்களின் சுயதணிக்கை முறை ஒரு பிரதான பிரச்சினையாகவுள்ளது. எல்லா ஊடக நிலையங்களும் தத்தமது செய்திகளைப் பிரசுரிக்க முன்னர், தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்திடம் அவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று பாதுகாப்பமைச்சிடமிருந்து வெளியிடப்பட்ட கடிதத்துடன் இச் சுயதணிக்கைமுறை மீளவும் செப்டெம்பரில் அமுல்படுத்தப்பட்டது. அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்புப் படையினர் அவதானித்து வருவதாகவும் 'சர்வதேச பணிக்குழு'வுக்கு அறியத்தரப்பட்டிருக்கிறது. இந்தவிதமான சம்பவங்களின் பின்னணியிலேயே 'சர்வதேச பணிக்குழு' தனது நேர்காணல்களை நடத்தியது.

தனியார் துறையிலுள்ள சில ஊடகவியலாளர்கள், ஒரு 'அச்சந்தரும் சூழல்' மற்றும் 'விரோத மனப்பாங்கு' காணப்படுவதாகச் கூறுகின்றனர். அரசசார்புடைய ஊடகங்கள் விமர்சனங்களைத் தவிர்க்கும் அதேவேளை, தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலிகள் விடுதலைப் புலிகள் பற்றிய செய்திகளில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்றும், அவர்களுக்கு வானலை நேரத்தை வழங்கவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. தாம் பெறும் தகவல்களையும் செய்திகளையும் சமப்படுத்துவதில் தமக்குப் பெரும் கஷ்டங்களும், எழுதும்போது சுயதணிக்கைக் கட்டுப்பாடுகளும் இருப்பதாக அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகத்தின் ஒரு பகுதியினர், சமூகக்குழுத் தலைவர்கள் போன்றோர், இச்சுயதணிக்கையைக் கண்டிப்பவர்களைத் 'துரோகிகள்' என்றும் 'உளவாளிகள்' என்றும் விபரித்து அவர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தக்கூடத் தயாராயிருக்கின்றனர்.

சிங்கள ஆங்கில ஊடகங்களின் அனுபவங்களுக்கும், தமிழ் ஊடகங்களின் அனுபவங்களுக்குமிடையே மிகப் பெரிய வித்தியாசங்கள் இருப்பதை 'சர்வதேச பணிக்குழு' அவதானித்தது. அரசாங்கம் தனது நடவடிக்கைகளை ஆதரிக்கவேண்டுமென்று கொடுக்கும் அழுத்தம் ஒரு பக்கம் (முக்கியமாக, புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக, மிகவும் பிரபலமான செய்தி ஊடகங்கள் கூட சுயதணிக்கைமுறையைப் பின்பற்றவேண்டுமென்ற அழுத்தம்), விடுதலைப் புலிகளின் மிரட்டல் ஒரு பக்கம் என ஆங்கில சிங்கள ஊடகங்கள் கூறும் அதேவேளை; தினமும் அதி பயங்கரங்களை எதிர்நோக்கும் தமிழ் ஊடகங்களோடு ஒப்பிடும்போது, இவை குறைந்தளவான கட்டுப்பாட்டுடனும், பயங்கரச் சூழல்களிலுமே பணியாற்றுகின்றன எனலாம்.

ஒரு தமிழ் ஊடகவியலாளர் விபரித்ததுபோல; தணிக்கை மறைமுகமாக நடைமுறைப் படுத்தப்படும் தென்னிலங்கை என்றும், பெரும்பாலும் நேரடியாகவும் பகிரங்கமாகவும் நடைமுறைப்படுத்தப்படும் வடக்கு, கிழக்கு என்றும் நாடு இரு பிரிவாகவுள்ளது. இவ்வித்தியாசத்தை விளக்கும்போது, "இவை இரண்டு வேறுபட்ட நாடுகளிலிருந்து வெளியிடப்படுவது போலிருக்கிறது"[8] என்றார் அவர்.

ஊடகங்களுக்கிடையேயுள்ள இந்த இரு துருவநிலை, நிலைமையை மோசமாக்குகிறது. ஒரு ஊடகவியலாளர் கூறுவதைப்போல், 'தமிழ் ஊடகங்கள் தமிழ் சாட்சிகளைத்

*8 இதைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்பினால். 'இலங்கையின் வட கிழக்கு ஊடக ஆய்வு' என்ற மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், மற்றும் சரவ்தேச ஊடக அனுசரணை என்பன ஜூன் 2003ல் வெளியிட்ட அறிக்கையைப் பார்க்கலாம்.*

தேடுகின்றன, சிங்கள ஊடகங்களும் அவ்வாறே'. இன்னொரு ஊடகச் செயற்பாட்டாளர்; 'ஒற்றுமை இல்லை' என்றும், இது இந்தப் பிரிவினையை மேலும் பலவீனமாக்குகிறது என்றும் கூறினார்.

சூழ்நிலையை விபரிக்கும் மேலுமொரு ஊடகவியலாளர்; முரண்பாட்டுக் களத்திலிருந்து கொண்டு தமிழ் ஊடகவியலாளர்கள் செய்தி வெளியிடுவதாலும், அதேநேரத்தில் சிங்கள ஊடகங்களோ இரண்டாம் நிலை தகவல்களை அறிக்கை செய்வதாலுமே இந்த மீறல்கள் ஏற்படுகின்றன என்றார். வடக்குக் கிழக்கிலிருந்து செய்திகளை அறிவிப்பதற்கு முயலும் பல ஊடகவியலாளர்கள்; ஒன்றில் இராணுவத்தினராலோ அல்லது விடுதலைப் புலிகளாலோ சூழப்பட்டிருப்பதாகவும், இருபகுதியினருமே தத்தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருந்து செய்திகள் போவது பற்றி மிகவும் இறுக்கமான தன்மையையே கொண்டிருக்கின்றனர் என்றும் கூறுகின்றனர்.

இருந்தபோதிலும், தொடரும் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, தொழில்முறை ரீதியாக தொழிற்சங்கங்கள் மூலமாகத் தீர்வைக் காண்பதற்குச் சில ஊடகவியலாளர்கள் கூட்டிணைந்து பணியாற்றி வருகின்றனர்.

வடக்கு, கிழக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ் நிருபர்களோ, பொலிஸும் இராணுவமும் தகவல்களை ஊடகவியலாளர்களிடம் உறுதிப்படுத்த மறுப்பதில் தொடங்கி, தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியபீட கொள்கைகளில் தலையிடுவது, நடு இரவுகளில் பத்திரிகைச் செய்தி அறைக்குள் இராணுவம் மற்றும் பொலிஸ் நுழைவது, தொலைபேசியில் கொலைமிரட்டல்கள்[9] விடுவது வரையில் பல அழுத்தங்களைச் சந்திக்கின்றனர். வட கிழக்கில் பத்திரிகை விநியோகத்தைத் தடுப்பதானது, பத்திரிகைச் சுதந்திரத்தை மீறுவது மாத்திரமல்லாமல் தேவையான தகவல்கள் கிடைக்காமல் உள்ளூர்ச் சமூகத்தின் பாதுகாப்பின்மையை மேலும் அதிகரிக்கவும் கூடும். இதனடிப்படையில்; அரசாங்கப் பத்திரிகைகளல்லாத[10] 'வீரகேசரி', 'தினக்குரல்', 'சுடர் ஒளி' போன்ற பத்திரிகைகள் கிழக்கில் விநியோகிக்கப்படுவதை ஆயுதக்குழுவினர், குறிப்பாக, 'கருணா குழு'வினர் தடுப்பதாகவும் 'சர்வதேச பணிக்குழு'விற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. போர் நடக்கும் பகுதிகளில் எடுக்கப்பட்ட ஒளிப்பதிவுகளில் ஒரு பிரதியைத் தமக்குக் கொடுக்கவேண்டுமென இராணுவம் வற்புறுத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகளும் சில பத்திரிகைச் சுதந்திர மீறல் குற்றங்களைச் செய்தவர்கள் என 'சர்வதேச பணிக்குழு' கண்டறிந்துள்ளது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பத்திரிகைச் சுதந்திரம் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஊடகவியலாளர் கடத்தல்கள், ஒரு ஊடகச் செயற்பாட்டாளரின் கொலை, ஒரு தமிழ்ப் பத்திரிகை மீது அழுத்தம், அரச தரப்புப் பத்திரிகையில் வேலை செய்யும் தமிழ் ஊடகவியலாளர்களைத் தத்தமது பதவிகளிலிருந்து விலகச் செய்யும் முயற்சி போன்ற சம்பவங்களுடனும் இவ்வியக்கம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கிலங்கையிலுமுள்ள ஊடகச் செயற்பாட்டாளர்கள் தமது செய்திகளை அறிக்கையிடுவதில் குறிப்பிடத்தக்களவு சிரமங்களை எதிர் கொள்கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கான போக்குவரத்துச் சேவைகள் பெரும்பாலும் ஒழுங்கின்றியும் நம்பிக்கையற்றதாகவும் இருக்கின்றன. அவர்களுக்குச் செல்போன் வசதிகளில்லை, சாதாரணத் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இணைய வலைப்பின்னல் வசதி மூலம் செய்திகளைக் கொடுப்பதும் எடுப்பதும் கூடத் தடுக்கப்பட்டுள்ளது.

இந்தவிதமான சூழ்நிலையில் தான் செய்தி கொடுக்கவேண்டிய முயற்சிகளைப் பற்றிக் கூறிய ஒரு தமிழ் ஊடகவியலாளர், 'நான்கு அரசாங்கங்களு'க்குத் தாம் பணியவேண்டியிருப்பதாகச் சொன்னார். அவையாவன; அரசாங்கம், விடுதலைப் புலிகள், ஏனைய ஆயுததாரிகள், மற்றும் பலதரப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவல் அதிகாரிகள். நேர்காணப்பட்ட இன்னொருவர் இதே மனப்பாங்குடன், பொதுமக்கள் வேறுபட்டு நிற்பது சமூகத்தின் கவலைக்கிடமான பிரிவினை என்றும், அரசசார்பற்ற நிறுவனங்களும் தனியார் பிரிவுகளும், சிங்கள ஊடகங்களைப் பார்ப்பவர்களும் அவற்றை நம்புபவர்களும், தமிழ் ஊடகங்களைப் பார்ப்பவர்களும் அவற்றை நம்புபவர்களும், அரசாங்கத்தின் ஆதரவாளர்கள், மற்றும் இந்த மூன்று வகைக்குள்ளும் அடங்காதவர்கள் என நான்கு விதமான இலங்கை இருக்கிறது என்று தனது கருத்தை வெளியிட்டார்.

*9 கடந்த நவம்பர் 6ஆம் திகதி 512ஆம் பிரிவு இராணுவ உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்திலுள்ள 'உதயன்', 'யாழ் தினக்குரல்', 'வலம்புரி' போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர்களை அழைத்து, விடுதலைப் புலிகளின் செய்திகளைப் பிரசுரிக்கவேண்டாமெனவும், குறிப்பாக 27.11ல் மாவீரர் தினம் வருவதால் புலிகளின் தலைவர் பிரபாகரனின் செய்தியைப் பிரசுரிக்கவேண்டாமெனவும் கூறினர். (இராணுவம் தமிழ் ஊடகங்களை சுயதணிக்கை செய்யுமாறு வற்புறுத்துகிறது- 'எல்லைகளற்ற செய்தியாளர்கள்' 09.11.2006).*

*10 விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்த கருணா குழு, 'வீரகேசரி'யின் 10,000 பிரதிகளை மட்டக்களப்பருகே 22.10.2006ல் தீயிட்டுக் கொழுத்தியது.*

இந்த விதமான நோக்குகள் எல்லா நேரங்களிலும் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சரான அனுர பிரியதர்ஷன யாப்பா; பிரச்சினைகள் மற்றும் ஆட்சேபனைகள் தோன்றும் சந்தர்ப்பங்களில் தமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளும்படி தாம் ஊடகவியலாளர்களை ஊக்கப் படுத்தியதாக உறுதிப் படுத்தினார். ஊடகவியலாளர்களுக்கு அமைச்சின் கதவுகள் எந்நேரமும் திறந்திருக்கு மெனவும், அமைச்சரும் அவரது தொலைபேசிகளும் அவர் வீட்டில் இருக்கும் சந்தர்ப்பத்தில் கூட எல்லோரும் எந்நேரமும் அணுகக்கூடியவகையில் இருக்கும் எனவும் உறுதியளித்தார். ஊடகவியலாளர்கள் அரசாங்கத்தின் உதவிப்பணம் பெறும் திட்டத்தையும் இந்த அமைச்சர் ஏற்படுத்தினார். அத்துடன், பாதுகாப்பு அமைச்சும், ஊடகவியலாளர்கள் அவசர காலங்களில் தொடர்பு கொள்வதற்காகத் தனியான ஒரு தொலைபேசி இணைப்பு வசதியை, செய்திகள் பதிவுசெய்யும் வசதியுடன் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

தமிழ்ப் பத்திரிகைகளும் அவற்றை வாசிப்பவர்களும்; சமமான நோக்குடனின்றி ‘இரண்டாம் தர’க் குடிமக்களாகப் பார்க்கப்பட்டதுடன், ‘மிரட்டப்பட்ட இனம்’ என்ற உணர்வுடன், போதிய வருமானமின்றி துக்ககரமான வாழ்க்கையையும் வாழ்க்கைத்தரத்தையும் அந்த ஊடகங்கள் சார்ந்தோர் கொண்டிருப்பது ‘சர்வதேச பணிக்குழு’வால் அவதானிக்கப்பட்டது.

சில ஊடகவியலாளர்களிடையே தொழில்முறைத் தேர்ச்சி இல்லாதிருப்பது இன்னுமொரு முக்கிய பிரச்சினையாகும். இதனுடன், தகவல்களைப் பெற்றுக்கொள்வதிலுள்ள பிரச்சினைகள், பொதுமக்களைச் சேர்த்துக்கொள்வதில் மற்றும் தனிப்பட்டவர்களினதும் ஊடகங்களினதும் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வில்லாதிருத்தல் போன்றனவும் ஊடகங்களைப் பலவீனமாக்குவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

தொழில்முறைத் தேர்ச்சியுடைய ஊடகவியலாளர்களிடையேயும், ஊழல், ஊடக நெறிமுறைகளுக்குப் புறம்பான செயற்பாடுகள் என்பன காணப்படுவதுடன், ‘நீடித்த பயம்’ என்னும் வியாதியும் அவர்களின் ஒவ்வொரு செயல்களிலும் அவர்களின் ஒவ்வொரு செய்பாடுகளுடன் கூடவே செல்கிறது. முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட இரு தரப்புப் பிரதிநிதிகளாலும், அநாமதேயத் தொலைபேசி மிரட்டல்கள் மற்றும் அவமதிப்புகள் என்பன அவதானிக்கப்பட்டதுடன்,‘அரச முகவர்கள்’ எனப்படுபவர்களால் தமது பேச்சுக்கள் கண்காணிக்கப்பட்டுப் பின்னர் தாம் தொல்லைக்குட்படுத்தப்படக்கூடும் என்ற பயமும் ஊடகவியலாளர்களிடையே இருக்கிறது.

# 4 ஊடகக்கொள்கைச் சூழல்

அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் சட்டக் கட்டமைப்பு பற்றிய விடயத்திலும், பத்திரிகைச் சுதந்திரத்திலும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திலும் அவை தமது கட்டுப்பாட்டைச் செலுத்தும் ஒரு கலக்கமான சூழ்நிலையை 'சர்வதேச பணிக்குழு' அவதானித்துள்ளது. நாட்டின் ஜனநாயகத்திற்குப் பத்திரிகைச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் ஒரு திறவுகோல் என வெளிப்படையாகச் சொல்லும் அரசாங்கம், சுதந்திரமான பன்முக ஊடகத்தை முன்னேற்றுவதற்குரிய எந்த முறையான சட்டச்சூழலையும் உருவாக்கவில்லை. மாறாக, இதற்காக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் நேரெதிரான தைச் செய்வதற்குக் காரணமானது.

இப்பிரச்சினை காரணமாக வெளிப்படையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று, பல அதிகாரபூர்வமான சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும் கூட, அரச கூட்டுத்தாபன ஒலிபரப்பாளர்களை, ஆசிரியபீட சுதந்திரமுள்ள உண்மையான பொதுமக்கள் சேவை ஒலிபரப்பாளர்களாக மாற்றுவதற்குத் தேவையான எந்தவித நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை. உதாரணமாக, 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம், 1966. இல.37ன்படி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரசபை உறுப்பினர்கள் யாவரும் அமைச்சராலேயே நியமிக்கப்பட்டவர்களாவர். ஜனநாயக ரீதியற்ற இச்சூழ்நிலையானது, அரசசார்புடைய ஒலிபரப்பாளர்களால் ஒருபக்கச்சார்பான செய்திகளை மட்டுமே அறிக்கை செய்யப்படுவதற்கும் வழிவகுக்கும்.

வர்த்தக மற்றும் சமூக ஒலிபரப்பு நிறுவனங்களுக்கு அனுமதிகள் அளிக்கும் அதிகாரத்தை யுடைய ஒரு சுதந்திரமான ஒலிபரப்பு அதிகார சபையை உருவாக்கும் சட்டத்தை அங்கீகரிக்கவும் அரசாங்கம் தவறியுள்ளது. பதிலாக இவ்விடயமானது, அமைச்சராலும் அல்லது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினாலும் நேரடியாகச் செய்யப்படுகிறது.

இதேவிதமாகவே, தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும், அவற்றை அறிந்துகொள்ளும் உரிமைகளுக்குமான சட்டமூலம் நாடாளுமன்ற விவாதத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டபோதும், அதை அங்கீகரிப்பது தாமதமாகிக்கொண்டே போகிறது. வெகுசன ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சரான அனுர பிரியதர்ஷன யாப்பா, தகவல் சுதந்திரத்திற்கான சட்டமூலம் பற்றிய நடவடிக்கைகளில் துறைசார் வல்லுனர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என உறுதிப்படுத்தினார். எனினும், 2002 இலிருந்து இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கும் இந் நடவடிக்கைகள் பற்றிச் சாதகமான எந்த முடிவும் ஏற்படவில்லை.

இதே நேரத்தில், பத்திரிகைப் பேரவையை மீள அறிமுகப்படுத்தவேண்டிய தேவையை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. 'சர்வதேச பணிக்குழு' வருகை தர முன்னர், தாம் ஒரு சட்டபூர்வமான பத்திரிகைப் பேரவையை மீளவும் அறிமுகப்படுத்தப்போவதாக அரசாங்கம் எச்சரித்திருந்தது. அரசாங்கம், தாம் தணிக்கைமுறைக்கு எதிரானதென்றும் ஊடகவியலாளர்கள் தாமே தமது நடைமுறையாலும் பழக்கத்தாலும் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறியபோதும், பாதுகாப்பமைச்சின் பேச்சாளர் ஒருவர், தமது அமைச்சும் பத்திரிகைப் பேரவையின் மீளறிமுகத்திற்காகப் பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயங்களைக் கோரியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

சுயமாக ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்ட நடவடிக்கைகளின் வெளிப்படையான தோல்விகளையும், தமது உறுப்பினர்களாலேயே உருவாக்கப்பட்டு நடைமுறையிலிருக்கும் ஊடக நெறிமுறைக் கோவையை ஊடகவியலாளர்கள் அசட்டை செய்வதையும் 'சர்வதேச பணிக்குழு' அவதானித்திருக்கிறது. ஊடக நெறிமுறைகளையும் பத்திரிகாதர்மத்தையும் பின்பற்றி நடைமுறையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளின் தரத்தை, முரண்பாடற்ற, ஒன்றுபடுத்தப்பட்ட வகையில் ஊடகங்கள் தெரிவிக்கவில்லை. ஊடக நெறிமுறைக் கோவையின் தாக்கமும் அது ஏற்படுத்தக்கூடிய தராதரமும், தமது தொழிலின் கடமைகளையும் உரிமைகளையும் புரிந்துகொண்டு பொதுவான அறிவுறுத்தல்களை அதிகரிக்கச் செய்வதும் எல்லாமே சரியான முறையில் பயன்படுத்தப்படாமலே இருந்துவருகிறது.

*11 இறுதி இணைப்பு 2 ஐப்பார்க்க: 'அவசரகாலச் சட்டங்கள் 2006 அறிமுகம் பற்றிய அறிக்கை'- மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், 'புதிய நடைமுறைகள் பற்றிய அறிக்கை' சுதந்திர ஊடக இயக்கம்*

இந்த அடிப்படைக் கட்டமைப்புப் பிரச்சினைகள், தொடர்ந்த தணிக்கை நடைமுறைகளாலும், உள்ளடக்கத்தைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளாலும் மேலும் மோசமாக்கப்பட்டுள்ளது. கடந்த ஓகஸ்டில், இராணுவம் தணிக்கைச் சட்டங்களையும், மிகக் கடுமையான புதிய சட்டங்களையும், 'அவசரகாலச் (பயங்கரவாதத் தடுப்பு மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கைகள்) சட்டங்களை மீண்டும் கொண்டுவருமாறு வாதிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். இந்தச் சட்டம் பின்னர் டிசம்பர் 2006ல் அறிமுகப்படுத்தப்பட்டது.[11]

'பாதுகாப்புச் சம்பந்தமான' விடயங்களை வெளியிடுவதில் வழக்கத்திலிருந்த தடைகளை மீறித் தமது தொழிலை ஊடகவியலாளர்கள் முறைப்படியாகச் செய்வதை, குறிப்பாக இறந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் போர் சம்பந்தமான சரியான புள்ளிவிபரங்களையும் வெளியிடுவதையும் தடுப்பதன்மூலம், ஊடகச் செயற்பாட்டாளர்கள் தமது ஆசிரியபீடப் பணிகளை தொழில்முறை ரீதியாகச் செய்யமுடியாதவாறு தடுக்கப்பட்டதை 'சர்வதேச பணிக்குழு' கண்டறிந்தது.

இவ்விதமான அச்சந்தரும் நிலைமை அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகளாலும் மேலும் மோசமாக்கப்பட்டது. அரசாங்கத்தாலும் ஆயுதக் கும்பலாலும் நடத்தப்பட்ட கடத்தல்கள் கொலைகள் பற்றிய செய்திகளைப் பிரசுரித்தலைத் தடுப்பது, ஊடகவியலாளர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதிலும், ஆசிரியபீட கொள்கைகளில் தலையீடு செய்வதிலும் இராணுவம் சம்பந்தப்பட்டிருப்பது தொடர்பான ஆவணங்களை வெளியிடுவதைத் தடுப்பது உள்ளிட்ட தேசவிரோதம் என்று கருதப்படும் செய்திக் கதைகளை வெளியிடுவதற்கு எதிராக கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என, வாராந்த செய்தியாளர் சந்திப்பில் ஜனாதிபதி அழுத்திக் கூறியிருப்பதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். சமீப மாதங்களில் கிழக்கிலங்கையில் 475 பேர் கடத்தப்பட்டிருக்கின்றனர் என்று நம்பப்படுகின்ற இந்த நிலையிலும் மேற்கூறிய எல்லாமே இன்னமும் தொடர்கிறது.

இது மட்டுமல்லாது, விளம்பரத்தின் மீதான வரிகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. அரச ஊடகங்கள், ஊடக தொழில்சார் நிபுணர்களுக்குப் பதிலாகத் தொடர்ந்தும் அரசியல்வாதிகளால் நியமிக்கப்படுவோராலேயே நடத்தப்பட்டு வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட 'தேசிய நலனுக்கான ஊடக நிலையம்' மூலமாக மட்டுமே அறிவதைத் தவிர, போர் பற்றிய தகவல்களை அறிவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தத்தில், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகவும் திறமையாகவும் செயற்படுவதற்கும், அதனை ஊக்கப்படுத்துவதற்குமுரிய அரசாங்கக் கொள்கைக் கட்டுமானத்தைத் தொடங்குவதிலும், ஊடகவியலாளரிடையே ஒற்றுமையுணர்வை ஊட்டுவது மற்றும் முரண்பாட்டுச் சூழலில் அவசியமான தீர்வுகளை அளிப்பதிலும், விமர்சனத்திற்குரிய வகையில் பின்னடைவு காணப்படுவதைச் 'சர்வதேச பணிக்குழு' அவதானித்துள்ளது.

சமூக ஊடகம் என்பதற்கப்பால், உண்மையான ஒரு பொதுமக்கள் சேவை ஊடகமாகச் செயற்படுவதற்குரிய சொந்தத் தொழில்நுட்பங்களை உருவாக்கித் தொழிற்படுவதற்கான தொழில்சார் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு, ஊடகங்கள் தாமாகவே முயலவேண்டியிருக்கிறது. மேலும் ஊடகச் சமூகமானது, வேறுபாடுகளைத் தாண்டி, அனைத்தையும் உள்ளடக்கும் வகையில், நடைமுறையிலுள்ள தொழில்சார், சுய ஒழுங்கு செய்முறைகளை வலியுறுத்தி செயற்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

# 5 கண்காணிப்புகளும் அறிவுறுத்தல்களும்

'சர்வதேச பணிக்குழு'வின் அங்கத்தவர்களின் அவதானங்களின்படியும், நீண்டகாலமாக இலங்கையில் இயங்கும் சர்வதேச அமைப்புக்களின் அவதானங்களின்படியும், அரசாங்கம், பாதுகாப்புப் படையினர், விடுதலைப் புலிகள், அரசியல் கட்சிகள், ஆயுதக் குழுக்கள் மற்றும் ஊடகச் சமூகம் என்பன பொருத்தமான வகையில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

நாட்டின் அரசியலமைப்பின்படி அரசாங்கத்தின் கடப்பாடுகள், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தம், மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனம் மற்றும் பொருத்தமான பிற சர்வதேசத் தராதரங்களைப் பின்பற்றி, ஊடகவியலாளர்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் செய்தி வெளியிடுவதற்குகந்த, பலவகைப்பட்ட பல் ஊடகச் சூழ்நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

**அங்கீகரி:** பதற்றத்தையும், பாதுகாப்பற்ற தன்மையையும் குறைப்பதில், சுதந்திரமான, சமநிலையான, பக்கஞ்சாராத, துல்லியமான செய்திகள் வகிக்கும் முக்கிய பங்கை அங்கீகரிப்பதுடன், நம்பகமான, துல்லியமான தகவல்களை அளிப்பதற்காகத் தம்மை அர்ப்பணிக்கும் ஊடகவியலாளரின் நெஞ்சுரத்தையும், தொழில்முறைத் தேர்ச்சியையும் தட்டிக்கொடுக்கவேண்டும். நிலையான, அர்த்தமுள்ள சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகச் செய்யும் எந்தவொரு முயற்சிக்கும் இவ்வாறான நெறிமுறைகளைப் பின்பற்றும் ஒரு சுதந்திர ஊடகத்தின் பங்கு அத்தியாவசியமான ஒன்றாகும்.

**உடனடியாக நிறுத்து:** போரிலீடுபட்டிருக்கும் சகலராலும் மேற்கொள்ளப்படும், ஊடகவியலாளருக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் எதிரான எல்லாவிதமான மிரட்டல்கள், அவமதிப்புக்கள், ஆட்கடத்தல்கள் மற்றும் தாக்குதல்களும், முக்கியமாகத் தமிழ் ஊடகங்களின் மீது, பத்திரிகைச் சுதந்திரத்தையும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் முற்றுமுழுதாகத் தடுக்கும் நோக்குடன் இன்னமும் தொடரும் தாக்குதல்களும், உடனடியாக நிறுத்தப்படவேண்டும். ஜெனீவா ஒப்பந்தத்தின்[12] கீழ் போரில் ஈடுபடுவோருக்குள்ள பொறுப்புக்களை 'சர்வதேச பணிக்குழு' நினைவூட்டுகிறது.

**நடவடிக்கையெடு:** ஊடகவியலாளர்களின் கொலைகள் மற்றும் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்குமெதிரான கொலை மிரட்டல்கள் பற்றிய முழுதான, வெளிப்படையான, சரியான நேரத்திலான விசாரணைகளையும், இப்பாதகங்களைச் செய்தோர் தண்டனையிலிருந்து தப்புவதற்கெதிரான நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இவ்விசாரணைகளில், சுப்பிரமணியம் சுகிர்தராஜா, சுரேஷ்குமார், ரஞ்சித்குமார், லக்மல் டி சில்வா, மரியதாஸ் மனோஜன்ராஜ், சதாசிவம் பாஸ்கரன் மற்றும் சின்னத்தம்பி சிவமகாராஜா போன்றோரின் கொலைகளும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். இந்த எல்லா ஊடகவியலாளர்களும் 2006ல் கொல்லப்பட்டனர், ஆனாலும், சமீப ஆண்டுகளில் நடந்த இதுபோன்ற வேறு பல சம்பவங்களும் முழுதாக விசாரிக்கப்படவேண்டும்.

**ஏற்றுக்கொள்:** ஊடகவியலாளர்களுக்கெதிரான தாக்குதல்கள் போரிலீடுபட்டிருக்கும் சகல தரப்பினராலும் நடத்தப்படுகிறதென்பதை அறிந்திருக்கும் 'சர்வதேச பணிக்குழு'; தண்டனை புரிந்தவர்கள் அவற்றிலிருந்து தப்பும் குற்றச்சாட்டுகள், அவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடியவர்களான அரசாங்கம், பாதுகாப்புப் படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் போன்றோரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே காணப்படுகிறது என்று நிச்சயமாக நம்புகிறது. 2006 மே 2இல் கொழும்பில் நடந்த 'யுனெஸ்கோ'வின் உலக பத்திரிகை சுதந்திர தினத்தில் பங்குபற்றியோர் வலியுறுத்தியதற்கிணங்க, ஊடகவியலாளர்களையும் அவர்கள் சம்பந்தப்பட்டவைகளையும் தாக்குபவர்களைக் கைதுசெய்து தண்டனை கொடுப்பதை உறுதிப்படுத்த மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இக்கருத்தினடிப்படையில், நடந்த சம்பவங்கள் யாவும் முழுதாக விசாரணை செய்யப்பட்டு வருகின்றனவென்றும் அறிக்கைகள் விரைவிலேயே ஒரு ஒழுங்கான முறையில் வெளிவிடப்படும் என்றும் அரச பாதுகாப்புப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல உறுதியளித்திருப்பதைச் 'சர்வதேச பணிக்குழு' வரவேற்கிறது.

*12 குறிப்பாக இது, போர்க்கைதிகளை நடத்தும் முறை சம்பந்தமான 12.08.1949 ன், 3ஆவது ஜெனீவா ஒப்பந்தம் பற்றியும், 08.06.1977ன் மேலதிகமாகக் கடைப்பிடிக்கவேண்டிய முறையையும், குறிப்பாக, மேலதிகமாகக் கடைப்பிடிக்கவேண்டிய 79ஆவது பிரிவு, போரில் ஈடுபட்டிருக்கும் இடங்களில் வேலைசெய்யும் செய்தியாளர்களைப் பாதுகாப்பது தொடர்பானது- (ஐ.நா. தீர்மானம் 1738)*

**உறுதியளி:** ஊடகவியலாளர்களுக்கும், ஊடக நிறுவனங்களுக்கும், பாதுகாப்பையும், மிரட்டல் மற்றும் தாக்குதல்களினால் அவர்களது நடவடிக்கைகள் பாதிக்கப்படாது என்பதை உத்தரவாதமளிக்கும் சரியான நேரத்திலான முழு ஆதரவையும் உறுதிப்படுத்த வேண்டும். ஊடக ஆசிரியர்களும் ஊடக நிர்வாகத்தினரும் தமது ஊழியரின் பாதுகாப்பை உத்தரவாதமளிப்பதற்குத் தம்மாலியன்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

**நிறுத்து:** பத்திரிகைச் சுதந்திரத்தில் தலையிடுவதை நிறுத்தவேண்டும் என்பதுடன், இந்த விடயத்தில் நாடளாவிய ரீதியிலுள்ள இராணுவத்தினரோ பொலிஸ் உத்தியோகத்தரோ செய்திக் கருத்துக்களில் தலையிடமாட்டார்கள் எனத் தெரிவிக்கும் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் ஈடுபாட்டை ‘சர்வதேச பணிக்குழு’ வரவேற்கிறது.

**இடமளி:** ஊடகங்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், முக்கியமாக முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களிருக்கும் பகுதிகளில் செய்திகள் சேகரிப்பதற்குரிய, முழுதான, தடையற்ற வழியை அனுமதிக்கவேண்டும்.

**நிறுத்து:** ஊடகவியலாளர்களினதும் அவர்களது குடும்பத்தினரதும் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதத்தில் அப்பட்டமாக அவதூறு பேசுவது, மற்றும் அவர்களின் மீதான வெறுப்புகளை வெளிப்படையாகக் காட்டும் பயங்கரமானதும் பொறுப்பற்றதுமான வழக்கத்தை நிறுத்தவேண்டும்.

**திரும்பப்பெறு:** பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் இடையூறுகளை ஏற்படுத்தும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளைத் திரும்பப் பெறுவதுடன், நேரடியாகவோ மறைமுகமாகவோ தணிக்கைகளை அறிமுகப் படுத்த எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

**மீளாய்வுசெய்:** ஓகஸ்ட் 2005 மற்றும் டிசம்பர் 2006 இல் அமுல்ப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டங்கள், இரகசியப் பாதுகாப்புச் சட்டம், பத்திரிகைப் பேரவைச் சட்டங்கள், ஒலிபரப்புச் சட்டங்கள், நீதிமன்ற அவமதிப்பு அதிகாரங்களும் ஏனைய பொருத்தமான சட்டங்கள் போன்ற இலங்கையின் தற்போதைய சட்டங்கள், விதிகள், அதிகாரங்கள் ஆகியவற்றை, சர்வதேச பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் சர்வதேச கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் தராதரங்களிற்கு ஏற்ப மீளாய்வு செய்யவேண்டும். சட்டபூர்வமான பத்திரிகைப் பேரவையை நிறுவுவதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கு மத்தியிலே, தன்னிச்சையான சுதந்திரமான சட்டங்களே இலங்கை அச்சு ஊடகங்களுக்குப் பொருத்தமான ஒரே சட்டம் என ‘சர்வதேச பணிக்குழு’ நம்புகிறது.

**அங்கீகரி:** தகவல் சுதந்திரம் என்பது ஒவ்வொருவருக்குமான அடிப்படைச் சுதந்திரம் என்பதை அறிந்துகொண்டு, அதனை வலுவூட்டும் வகையில் சர்வதேச தராதரத்தில் ஒரு தகவல் சுதந்திரச் சட்டத்தை இயற்றவேண்டும்.

**அவசர நடவடிக்கை எடு:** அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் ஊடகங்களை, -ஆசிரியருக்குரிய எழுத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்பட்ட- பொதுமக்கள் சேவை ஊடகங்களாகவோ, அல்லது தனியார் நிறுவனங்களாகவோ அல்லது சுதந்திர ஊடகமாகவோ மாற்றுவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். சமூக வானொலிச் சேவைகள் உள்ளிட்ட தனியார் ஒலிபரப்பாளர்களுடைய சுதந்திரம் பாதுகாக்கப்படுவதோடு, ஒரு தன்னிச்சையான நிறுவனத்தால் அவை ஒழுங்குபடுத்தப் படவேண்டும்.

# 6 பின்னிணைப்பு

## 6.1 பின்னிணைப்பு 1:

**'இலங்கையில் ஊடகப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் தண்டனையிலிருந்து தப்புவதைத் தடுத்து நிறுத்துங்கள்: தெற்காசிய பத்திரிகையாசிரியர் பணிக்குழு' என்ற தலைப்பில், சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் தலைவர் கிறிஸ்டோபர் வரன், இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரும், பாதுகாப்பு விவகாரப் பேச்சாளருமான மேன்மைதகு கெஹலிய றம்புக்வெல்லவுக்கு எழுதிய பகிரங்கக் கடிதம்.**

ஊடக வெளியீடு: இலங்கை, ஒக்டோபர் 25, 2006

இலங்கை ஊடகவியலாளர்களைத் தாக்குவோர், தண்டனையிலிருந்து தப்பும் நிலைமையை முடிவுக்குக் கொண்டுவரவும்'- தெற்காசிய ஆசிரியர் பணிக்குழு

மஸார் அப்பாஸ் - சபைத் தலைவர்-AFP, கராச்சி, பாகிஸ்தான் செய்தியாளர் சுதந்திரக் கூட்டணி (Pakistan Federal Union of Journalists - PFUJ) இன் செயலாளர், ஜக்குலின் பார்க், சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் ஆசிய பிராந்திய இயக்குநர் (International Federation of Journalists -IFJ), லக்ஷ்மி மூர்த்தி- திட்ட முகாமையாளர்-IFJ, சுனந்த தேஷப்பிரிய – தலைவர், சுதந்திர ஊடக இயக்கம் (Free Media Movement -FMM), போன்றோரை உள்ளடக்கிய பிரதிநிதிகளின் குழு, இலங்கைப் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹெலிய றம்புக்வெல்லவை 2006 ஒக்டோபர் 24இல் சந்தித்தனர்.

சமீப காலங்களில் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளில் ஏற்பட்ட சீர்கெட்ட நிலையைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களின் ஆபத்தான சூழ்நிலை தொடர்பாக ஆராயும் முகமாகத் தெற்காசியப் பத்திரிகையாசிரியர் பணிக்குழுவின் ஒரு பகுதியாகவே இந்தக் குழுவினரின் இலங்கை விஜயம் அமைந்தது.

இப் பிரதிநிதிகளின் குழு, சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் தலைவர் கிறிஸ்ரோபர் வரனினால் எழுதப்பட்ட, கடந்த இரு வருட காலத்தில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் பற்றிய விபரத் தொகுப்புகளடங்கிய கடிதத்தை அமைச்சரிடம் கையளித்தனர். அக்கடிதத்தில் குறிப்பிட்ட ஒவ்வொரு சம்பவங்கள் பற்றியும் தாம் ஆராய்ந்து பார்ப்பதாக அமைச்சர் றம்புக்வெல்ல அப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

2006ஒக்டோபர் 10இல் அமைச்சர் றம்புக்வெல்ல, ஊடக சுதந்திரச் சூழ்நிலையை அறிந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த, சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பினரை உள்ளடக்கிய 'சர்வதேசப் பத்திரிகைச் சுதந்திரம்' மற்றும் 'கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரப் பணிக்குழு' வின் பிரதிநிதிகளைச் சந்தித்திருந்தார்.

அவர்கள் சமர்ப்பித்த கடிதத்தின் பிரதி இதோ:

> மதிப்புக்குரிய கெஹெலிய றம்புக்வெல்ல அவர்களுக்கு,
> அமைச்சரும், பாதுகாப்புப் பேச்சாளரும்,
> இலங்கை அரசாங்கம்
>
> ஐயா,
>
> கடந்த சில மாதங்களாக அதிகரித்த வன்முறைகளில் தமது உயிர்களை இழந்தும், தாக்குதலுக்குள்ளாகியும் இன்னல்பட்ட மக்களுக்கும், அவர்களுடைய குடும்பத் தினருக்கும், சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் சார்பாக உண்மையான மன வருத்தத்ததை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊடகச் சூழ்நிலையை அறிந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்த சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பினர் உள்ளிட்ட 'சர்வதேசப் பத்திரிகைச் சுதந்திரம்' மற்றும் 'கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரப் பணிகுழு' வைக் கடந்த ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி நீங்கள் சந்தித்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். இந்தச் சந்திப்பின்போது, ஊடகவியலாளர்களின் கொலைகள் பற்றிய முழு விசாரணைகளைச் செய்வதற்கு அதிகாரபூர்வமாகக் கட்டளையிடுவதாக எம்மிடம் உறுதியளித்தீர்கள்.

சம்பவங்களைப் பற்றிய முழு விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் ஒழுங்கான முறையில் வெளியிடப்படும் என்ற உங்களது அன்றைய உறுதிமொழியைச் சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பும் அதன் பிரதிநிதிகளும், அதற்குப் பொறுப்பானவர்களும் வரவேற்றோம். கொலைசெய்யப்பட்டவர்களைப் பற்றியும் அதற்கான சூழ்நிலைகளைப் பற்றியுமான உங்களது தகவல்கள், மக்கள் குழுக்களால் எடுக்கப்பட்ட தொகுப்புக்களிலிருந்து வித்தியாசப்படுவதால், இச் சந்தர்ப்பத்தில் அது தொடர்பான பின்வரும் தகவல்களை நாம் மீண்டும் தெளிவாக்க விரும்புகிறோம்.

குறிப்பிட்ட ஊடகவியலாளர்களினதும், ஊடகப் பணியாளர்களினதும் தேவைப்பட்ட விபரங்கள் வருமாறு:

**2005**

- **தர்மரத்தினம் சிவராம் -** தர்மரத்தினம் சிவராமின் உடல் 2005 ஏப்ரல் 29 அன்று இலங்கைப் பாராளுமன்ற வளாகத்தினருகேயுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அடையாளம் காணப்படாத ஒரு கும்பல் முதல் நாள் அவரை ஒரு உணவு விடுதிக்கு வெளியால் இரவு 10.30மணியளவில் கடத்தியது. சிவராமின் உடல் கண்டு பிடிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயமானது, பாதுகாப்புப் படைகளால் மிகக் கவனமாகக் காவல் புரியப்படுகிறது. இது பல உள்ளூர் அமைப்புகள் அரசாங்கத்தின் மீது பழிகூறக் காரணமாயிருந்தது. 'தராகி' என்ற புனைபெயர் கொண்ட சிவராம், 'த டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் அரசியல் பத்தி எழுதி வந்ததுடன், தமிழ்நெற்.கொம் இணையத்தளத்தின் ஆசிரியர் குழுவில் உறுப்பினராகவுமிருந்தார். அவர் இலங்கை அரசாங்கத்தை வெளிப்படையாக விமர்சிப்பவராகவுமிருந்தார்.

- **ரேலங்கி செல்வராஜா-** 2005 ஒகஸ்ட் 12 அன்று ரேலங்கி செல்வராஜாவும் அவரது கணவரும் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் மதியம் 1 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டியில் சுட்டுக்கொல்லப்பட்டனர். செல்வராஜா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் தொலைக்காட்சித் தொகுப்பாளராக முன்னர் வேலைபார்த்துப் பின்பு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஊடகவியலாளராக பணிசெய்து வந்தார்.

**2006**

- **சுப்பிரமணியம் சுகிர்தராஜன் - 2006 ஜனவரி 24** திருகோணமலைத் துறைமுகத்தில் வேலை பார்த்தவரான சுகிர்தராஜன் ஒரு ஊடகவியலாளராகவும் இருந்தார். காலையில் வேலைக்குப் போவதற்குப் பேருந்துக்காகக் காத்திருக்கும்போது அவர் சுடப்பட்டார். திருகோணமலையில் இராணுவம் மற்றும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை விமர்சித்துப் படங்களையும் செய்தி அறிக்கைகளையும் 'சுடரொளி'ப் பத்திரிகையில் பிரசுரித்தார். கடந்த ஜனவரி இரண்டாம் திகதி கொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களது படங்களை இவர் பிரசுரித்ததால், அம்மாணவர்கள் 'கிரனேட்'டால் கொல்லப்பட்டனர் என்ற மூல அறிக்கை தவறானது என்பதை மறுத்துரைப்பதற்கு மிகவும் உதவியது.

- **சுரேஷ்குமார், ரஞ்சித்குமார் - 2006 மே 03,** 'உலகப் பத்திரிகைச் சுதந்திர தினத்'தைக் கொண்டாடுவதற்காகக் கொழும்பில் ஊடகவியலாளர்கள் கூடியிருந்த சமயத்தில், யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகைக் காரியாலயம் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டது. அப்பத்திரிகையின் சந்தைப்படுத்தல் முகாமையாளரான சுரேஷ்குமாரும், விநியோகப் பிரிவைச் சேர்ந்த ரஞ்சித்குமாரும் இதன்போது கொல்லப்பட்டனர். ஐந்து பேர் காயமடைந்தனர். அக்காரியாலயமும் சேதமாக்கப்பட்டது. பொலிஸார் ஆறு பேரைக் கைது செய்தனர். ஆனாலும் அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பிடிக்கப்பட்ட ஆறு பேருக்கும் நடந்த சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்று யாழ்ப்பாணத்தில் சிலரால் குற்றஞ்சாட்டப்பட்டது.

- **லக்மல் டி சில்வா – 2006 ஜுலை 02,** சுதந்திரச் செய்தியாளரான சம்பத் லக்மல் டி சில்வா, 2006 ஜுலை 2ஆம் திகதியன்று இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டார். இவர் அன்று காலை 5மணியளவில் அவரது பெற்றோரின் கொழும்பு தெற்கு, பொரலஸ்கமுவ வீட்டிலிருந்து கடத்தப்பட்டார். பின்னர் அங்கிருந்து 3கிலோ மீற்றர் தூரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். தனக்கு நெடுங்காலம் பழக்கமான சில இராணுவத்தினரைப் பார்க்கச் சென்றதாக அவரது தாயார் கூறினார்.

- **மரியதாஸ் மனோஜன்ராஜ் - 2006 ஓகஸ்ட் 01,** செய்திப் பத்திரிகை விற்பனையாளரான மரியதாஸ் மனோஜன்ராஜ் 2006 ஜுலை 27 அன்று, விநியோகிப்பதற்கான பத்திரிகைகளை வாங்க யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது, நிலக்கண்ணிவெடியினால் கொல்லப்பட்டார். தமிழ்ப் பத்திரிகை விநியோகஸ்தர்களுக்கு முன்னதாகவே பல கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

- **சதாசிவம் பாஸ்கரன் - 2006 ஓகஸ்ட் 16,** யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் 'உதயன்' பத்திரிகையின் சாரதியாகவும் விநியோகஸ்தராகவும் பணியாற்றிவந்த சதாசிவம் பாஸ்கரன், தற்காலிகமாக ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட நேரத்தில் பத்திரிகைப் பிரதிகளை விநியோகிப்பதற்காகச் சென்றபோது, அவரது வாகனத்தில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார். மிகவும் தெளிவான எழுத்துக்களால் எழுதப் பட்டிருந்த வாகனத்தில் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப்பகுதியினூடாகப் போய்க்கொண்டிருந்த வேளையிலேயே இவர் சுடப்பட்டார். இவர் இராணுவத்தினரால் சுடப்பட்டதாகத் 'தமிழ்நெற்' இணையத்தளம் தெரிவிக்கிறது.

- **சின்னத்தம்பி சிவமகாராஜா - 2006 ஓகஸ்ட் 21,** யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்படும் 'நமது ஈழநாடு' பத்திரிகையின் நிர்வாக இயக்குனரான சின்னத்தம்பி சிவமகாராஜா தெல்லிப்பளையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இக்கொலையையடுத்து 'நமது ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயம் மூடப்பட்டது.

நீங்கள் இச்சம்பவங்கள் பற்றி அறிந்திருப்பீர்கள் என்பதை நான் நன்கறிவேன். இந்தப் பத்திரிகையாளர்களும் வேறு பல ஊடகப் பணியாளர்களும் கடந்த 16 மாதத்தில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இவர்களின் கொலை விசாரணைகளின் முன்னேற்றம் பற்றிய அறிக்கைகளை விரைவில் சமர்ப்பித்து, அதன் பிரதிகளை, சுதந்திர ஊடக அமைப்பு போன்ற சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் உள்ளூர் அமைப்புக்களுக்கு அனுப்பிவைக்குமாறு நாம் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். இப்பிரதிநிதிகள் குழுவை ஒழுங்குசெய்த நிறுவனங்களின் பட்டியலை உங்களது தகவலுக்காகக் கீழே இணைத்திருக்கிறேன்.
உங்களது அவசரமான வேலைகளுக்கு நடுவிலே, ஒக்டோபர் 10ஆம் திகதியன்று எமது பிரதிநிதிகளைச் சந்திக்கத் தாராள மனதுடன் ஒப்புக்கொண்டதோடு, அவர்களுடன் குறிப்பிடத்தக்களவு நேரத்தை ஒதுக்கியமைக்குச் சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக் கடிதத்திற்கான உங்கள் பதிலை எதிர்பார்க்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள,

கிறிஸ்ரோபர் வரன்
தலைவர்
சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு

# 6.2 பின்னிணைப்பு 2:

**அவசரகாலச் (பயங்கரவாதத் தவிர்ப்பும் தடுப்பும்) சட்டம் 2006- அறிமுகம் பற்றிய அறிக்கை, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் டிசம்பர் 2006, மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்தின் 'புதிய சட்டங்கள் பற்றிய அறிக்கை'**

## அவசரகாலச் (பயங்கரவாதத் தவிர்ப்பும் தடுப்பும்) சட்டம் 2006- அறிமுகம் பற்றிய அறிக்கை, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் டிசம்பர் 2006

டிசம்பர் 2006ல் அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகாலச் (பயங்கரவாதத் தடுப்பு மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கைகள்) சட்டம் பற்றியும் அதிலுள்ள அம்சங்கள் பற்றியும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மிகவும் கவலைகொண்டுள்ளது.

தற்போதுள்ள அரசியல் மற்றும் அடிப்படை அரசியல் சட்டத்திலுள்ள சாராம்சத்தைத் தவிர்த்து புதிதாக உருவாக்கப்பட்ட இந்தப் புதிய சட்டங்கள் பற்றிய முறையான பிரதிபலிப்புக்களைச் செய்ய முடியாது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நம்புகிறது. எனவே, சர்வதேச மனித உரிமைகள் தராதரத்திற்கும் சட்டத்திற்கும் சமமாக இந்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு, அரசாங்கத்தையும் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கேட்டுக்கொள்கிறது.

எமது பிரதான கவலைகளைச் சுருக்கமாகக் கீழே தருகிறோம் :-

- சட்டங்களிலுள்ள பல பரந்த விரிவான மொழித்தொடர்கள்; பொது அமைப்புக்களின் சட்டரீதியான ஜனநாயக நடவடிக்கைகளையும், மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதற்குரிய அதிகாரங்களையும் தடுப்பதாக அமைந்துவிடும்.
- மனித உரிமைகள், ஊடகவுரிமைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்காகப் போராடும் குழுக்கள் உள்ளிட்ட பொது அமைப்புக்கள் மீதான நடவடிக்கைகளில், இந்தச் சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்படும் தகுதிவாய்ந்த அதிகாரியின் அதிகாரங்கள் அமைந்துள்ளன.
- முறையீட்டு நீதிமன்றத்தின் தொகுப்பும் சட்ட நிலைப்பாடும், அதிகாரப்பிரிவின் கொள்கைகளின் மீதான வெளிப்படையான மீறல் என்பதுடன், அரசாங்கத்தின் அதிகார எல்லையுடன் சட்டபூர்வமற்ற முறையில் ஆக்கிரமிப்பதாகவும் இருக்கிறது.
- தண்டனையிலிருந்து தப்புதலின் கடந்த கால நடப்புக்களையும் அதன் தற்காலச் சூழ்நிலையையும் வைத்துப் பார்க்கும்போது, சட்டப் பாதுகாப்பைத் தரும் சட்டப்பிரிவு களை (சட்டப்பிரிவு 15) உபயோகித்து, பொலிஸ் உறுப்பினர்கள், இராணுவத்தினர் மற்றும் ஏனையோர் தமது கடமையை நிறைவேற்றுவதற்காக நன்னம்பிக்கை அடிப்படையில் தண்டனையிலிருந்து பாதுகாப்புப்பெற இந்தச் சட்டம் இடமளிக்கக்கூடும்.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பெப்ரவரி 2002 இலேற்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவுகளை மீளவும் செயல்முறைப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கைகளையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர்க்கிறது.

எமது கவலைகள் விபரமாக விளக்கப்பட்டுள்ளன.

டிசம்பர் 7ஆம் திகதி புதன்கிழமை அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவு பற்றிய குழப்பம் இன்னுமுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் (தற்காலிக சட்ட உடன்பாடு) பிரிவு 1979 மீளவும் அறிமுகப்படுத்தப்போவது பற்றி ஜனாதிபதியும் பிரதம மந்திரியும் தனித்தனியாகப் பிரகடனப்படுத்தி வருகையில், பொதுமக்கள் பாதுகாப்பு அதிகார சட்டத் தலைப்பின் கீழ் அவசரகாலச் (பயங்கரவாதத் தடுப்பு மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கைகள்) சட்டம் என்ற புதியவகைச் சட்டத்தை அரசாங்கம் அமுல்ப்படுத்துவதாக பொதுமக்களுக்கு அறியத்தரப்பட்டது. மேலும், இப்புதிய சட்டங்களின் அறிமுகம் அரசாங்கத்தினது முடிவே எனப் பல அமைச்சர்கள் தமது பொது அறிக்கைகளில் பகிரங்கப்படுத்தியதுடன் இது விடுதலைப் புலிகளுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கலாமென ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமைகள் விடயத்திலும் பொதுமக்கள் மீது அதிகாரங்களைத் திணிக்கும் நேரெதிரான கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் இந்தக் குழப்பமான

மாறுபட்ட கருத்துக்கள் பற்றியும் மிகவும் கவலைகொண்டிருக்கும் நாம், இந்த விடயங்களுக்கான விளக்கத்தை அளிக்குமாறும் பின்வரும் அவதானிப்புகளை மேற்கொள்ளுமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

**அவசரகாலச் சட்டங்கள்**
**(பயங்கரவாதத் தடுப்பும் குறிப்பிட்ட பயங்கரவாதச் செயல்களும் 2006)**

பல சட்டங்களிலுள்ள பரந்த, விரிவான மொழித் தொடர்களை உபயோகித்து அவற்றைக் கொண்டு, தேசப் பாதுகாப்புக் கருதிப் பயங்கரவாதத்தை அடக்கக் காரணம் காட்டும் அதேநேரம், அவை, பொது அமைப்புக்களின் அதிகாரத்தையும் சட்டரீதியான நடவடிக்கைகளையும் தடுக்கக்கூடும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவலை கொள்கிறது.

சட்டப்பிரிவுகள் 2,3 மற்றும் 4, 16(1) இலுள்ள பயங்கரவாதம் பற்றிய விளக்கம், சட்டப் பாதுகாப்பு ஒப்பந்தம், சட்டப்பிரிவு 15 போன்றவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறோம். இச்சட்ட உடன்பாடுகள் எல்லாம் மிகப்பாரியதும், அடிப்படை அரசியல் யாப்பு ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட அடிப்படையுரிமைகளை மீறுவதற்கும் பொது அமைப்புக்களின் சட்டரீதியான நடவடிக்கைகளைத் தண்டனைக்குரிய குற்றமாக்கக் கூடிய வழிமுறைகளைக் கொண்டதுமாகும்.

ஆனபோதிலும், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்து மூல அங்கீகாரத்தோடு நடைபெறும், சமாதானத்திற்காதரவளிப்பது மற்றும் பயங்கரவாதத்தை நிறுத்துவது போன்ற சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நடக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாக இச்சட்டங்கள் சில விதிவிலக்குகளை அளித்துள்ளன. இதனால், இந்த முழு அதிகாரமுள்ள தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, மனித உரிமைகள், ஊடகவுரிமைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்காகப் போராடும் குழுக்கள் உள்ளிட்ட பொதுமக்கள் குழுக்களின் நடவடிக்கைகள் மீதான அதீத அதிகாரம் கிடைக்கப் பெறுகிறது. அரசாங்கத்திற்கு பொது அமைப்புக்கள் மீதான அளவுக்கதிகமான கட்டுப்பாடுகளை இந்த அதிகாரங்கள் அளிப்பதுடன், அக்குழுக்களுக்குத் தேவையான கருத்துவெளிப்பாடு, சுய அதிகாரம் மற்றும் பிற சுதந்திரங்களுக்கும் இவை பொருந்தாததாகவிருக்கிறது.

சகல அதிகாரங்களும் கொண்ட இந்த அதிகாரியின் முடிவுக்கெதிராக முறைப்பாடு செய்யவேண்டுமெனில், ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட, ஜனாதிபதிக்குச் சார்பானவர்களான- பாதுகாப்பு, நிதி, நீதி மற்றும் தேசக்கட்டுமான அமைச்சுகளின் செயலாளர்களைக் கொண்ட முறையீட்டு நீதிமன்றத்தில் தான் முறையீடு செய்யவேண்டும் என்ற உண்மையால், ஏற்கனவேயிருந்த அபாயங்கள் மேலும் மோசமாக்கப்பட்டன. அரசாங்கத்தின் உயர்ந்த ஒரு அங்கத்தில் உள்ளவர்கள் பாதிக்கு மேலான சட்ட அதிகாரங்களைக் கொண்டிருப்பதானது, அதிகாரப் பிரிவின் கொள்கைகளின் மீதான வெளிப்படையான மீறல் என்பதுடன், அரசாங்கத்தின் அதிகார எல்லையைத் துணைகொண்டு சட்டபூர்வமற்ற முறையில் ஆக்கிரமிப்பதுமாகும்.

மேலும், அமைச்சகங்களின் செயலாளர்களைக் கொண்ட ஒரு முறையீட்டு நீதிமன்றமானது சுதந்திரமாக இயங்குமென்ற கற்பனையான நம்பிக்கை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்திற்கு இல்லையென்பதோடு, சட்டப் பாதுகாப்பைத் தரும் சட்டப்பிரிவுகளை (சட்டப்பிரிவு 15) உபயோகித்துப் பொலிஸ் உறுப்பினர்கள், இராணுவத்தினர் மற்றும் ஏனையோர் தமது கடமையை நிறைவேற்றுவதற்காக நன்னம்பிக்கையின் அடிப்படையில் தமது செயல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடும். இச்சட்டங்களின் கீழ், அரசாங்கத்திற்கும் அதன் அதிகாரிகளுக்கும் அளிக்கப்பட்ட பரந்தளவிலான அதிகாரம், (இச்சட்டங்கள் பற்றிய) சுதந்திரமான புனராலோசனை இல்லாமை, (பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற)கொடூரமான சட்டங்களைக் காலங்காலமாகத் துஷ்பிரயோகஞ் செய்தல், சட்டரீதியான ஜனநாயக நடவடிக்கைகளையும் அரசியல் அபிப்பிராயபேதங் களையும் அடக்குதல், குறிப்பாகச் சமீப காலங்களில் இலங்கையில் தலையெடுத்திருக்கும் தண்டனையிலிருந்து தப்பும் கலாச்சாரம் முதலியவற்றை நாம் எடுத்துப் பார்க்கும்போது, இந்தவிதமான ஒப்பந்தம் சுலபமாகத் தண்டனையிலிருந்து தப்புதலை ஊக்குவிக்கு மேயொழிய, உண்மையான நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்புத்தராது.

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்**

பெப்ரவரி 2002ல் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனையையடுத்து இடைநிறுத்தப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சில பகுதிகளை மீளவும் நடைமுறைப்படுத்த முனையும் எந்த

முயற்சிக்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் எதிர்ப்புத் தெரிவிக்கிறது. எதிர்க் கட்சியினதும் மக்களுரிமைக் குழுக்களதும் எதிர்ப்பையும் மீறி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் 1979ல் அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது, அடிப்படை மனிதவுரிமைகளின் சர்வதேச தராதரத்திற்கு ஒத்துவராததாகவிருக்கும் ஒரு கொடுமையான சட்டப்பிரிவாகவிருக்கிறது. அச்சட்டத்தினால் பயங்கரவாதத்தைக் குறைக்கவோ நசுக்கவோ முடியவில்லை என்பதுடன், அரசியல் எதிரிகளை அவமானப்படுத்தவும் தண்டனையிலிருந்து தப்பும் கலாச்சாரத்தை ஆதரிக்கவுமே அது உதவியது எனலாம்.

### முடிவு

தற்போதைய அரசியல் மற்றும் அரசியலமைப்பு நிலைமைகளைப் புறந்தள்ளி, இப்புதிய சட்டங்களின் அறிமுகத்திற்கு எந்த முறையான பிரதிபலிப்பும் செய்யமுடியாதென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நம்புகிறது. அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்திற்கெதிரான அரசின் தொடர்ச்சியான பகிரங்கமான மீறலால், எந்தவொரு சுயேச்சையான குழுவின் சுதந்திரம், மேன்மை, நல்லாட்சி, தற்போதைய நிலையிலுள்ள சட்டதிட்டங்கள், நீதிமன்றத்தின் சுதந்திரம், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் செயற்படுதிறன், நாட்டின் அவசரகால நிலையில் அரசாங்கம் தனது அதீத அதிகாரங்களால் தனது சக்தியைப் பிரயோகிக்கும்போது தம்மை மதிக்கக்கூடிய சட்டப் பாதுகாப்பை உருவாக்கும் அதிகாரம் போன்றன வருந்தத்தக்க வகையில் இன்று இலங்கையில் இல்லை. அரசியல் பிரிவுகளிலுள்ள குறைபாடுகளைத் திருத்தியமைத்து, அவைகளை மனிதவுரிமைச் சட்டங்களின் சர்வதேச தராதரத்திற்கமைய ஏற்படுத்தவேண்டுமென அரசாங்கத்தையும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கேட்டுக்கொள்கிறது.

24/2, 28th Lane, Off Flower Road, Colombo 7
Tel: +94 11 2565404 – 6, +94 11 5552746, +94 11 5552748 Fax: +94 11 4714460
E-mail: cpa@sri.lanka.net, Website: www.cpalanka.org

## புதிய அவசரகாலச் சட்டங்கள் பற்றிய அறிக்கை சுதந்திர ஊடக முன்னணி, 2006 டிசம்பர் 8

அரசாங்கத்தினால் இவ்வாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுப் பாதுகாப்பு மற்றும் பயங்கர வாதத்திற்கெதிரான சட்டங்கள், இலங்கையில் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்குச் சவாலானவையாகும்.

2006 டிசம்பர் 6ல் ஏற்படுத்தப்பட்ட புதிய அவசரகாலச் சட்டங்கள் (பயங்கரவாதத் தடை மற்றும் தடுப்புச் சட்டமும், குறிப்பிட்ட பயங்கரவாதச் செயல்கள் சட்டமும்), கற்பனைத் தன்மையான பல விடயங்களைக் கொண்டிருக்கிறது. இதனால், தேசிய பாதுகாப்பினதும் பயங்கரவாதத் தடுப்பினதும் அடிப்படையில் கருத்துச் சுதந்திரமும் அதன் எல்லைகளும் சர்வதேச தராதரத்துடன் சமமாகவிருக்கிறதா என்பதைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டியிருக்கிறது.

தணிக்கை, மனித உரிமைமீறல், பொது அமைப்புக்களினது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் ஊடகச் சுதந்திரமின்மை போன்றவை சம்பந்தமான இந்தப்புதிய சட்டங்களின் உருவாக்கம் பற்றிச் சுதந்திர ஊடக இயக்கம் மிகுந்த கவலை கொண்டுள் ளது. இச்சட்ட விபரங்களைப் பின்வரும் இணையப் பக்கத்தில் படித்தறிந்து கொள்ளலாம். http://www.freemediasrilanka.org/index.php?action=con_news_full&id=389§ion= news)

பயங்கரவாதத் தடுப்பு என்பது எந்தவொரு ஜனநாயக அரசாங்கத்திற்குமுரிய சட்டரீதியான குறிக்கோள் என்பதுடன், பயங்கரவாதத்தையும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கை களையும் சட்டரீதியாக வரையறுப்பதும் அவை மீதான சட்டத்தடைகளை விதிப்பதும் தேவையானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாகும்.

ஆனபோதிலும், இச்சட்டங்கள் எக்காரணத்திற்காக இயற்றப்பட்டனவோ அதற்குப் பாதிப்பேற்படுத்தும் வகையில், அவை மிகவும் பரந்ததாகவோ அல்லது தெளிவில்லாத தாகவோ அமையாமல் பார்த்துக்கொள்வது மிக அவசியம். அடிப்படைச் சட்டரீதியாகப் பாதுகாக்கப்பட்ட இவ்வுரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் எப்போதும் சரிசமமானதாக அமையவேண்டும். வேறுவிதமாகச் சொல்லப்போனால், பயங்கரவாதத்திற்கெதிரான சட்டங்கள் ஜனநாயகப் பண்புகளையும், சட்டரீதியான அரசாங்கத்தின் அடிப்படைத் தராதரத்தையும் பலவீனப்படுத்தாது பார்த்துக்கொள்ளவேண்டும்.

சுதந்திர ஊடக இயக்கம் இதன் காரணமாக மிகவும் கவலை கொண்டுள்ளது. ஏற்கனவே நடைமுறையிலுள்ளவற்றுடன் சேர்ந்து இந்தப் புதிய சட்டங்கள்; பயங்கரவாதத்தைப்

பற்றி மிகவும் பரந்த எல்லையில் விவரிக்க முயற்சிப்பதுடன், இது, இலங்கையில் அடிப்படை உரிமைகளுக்கும் ஜனநாயக அதிகாரத்திற்கும் பயங்கரமான சவாலாகவுமுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 2001ல் ஏற்படுத்தப்பட்ட தீர்மானம் 1373ன் முறையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் தன்மைக்கும் நோக்கத்திற்குமுட்பட்ட வகையில் இப்புதிய சட்ட வெளியீட்டை ஸ்தாபிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் அவதானித்துள்ளோம். இருந்தபோதிலும், அவசரகாலச் சட்டங்கள் அமுலப்படுத்தப்படும் காலங்களில் காலங்காலமாக இலங்கையில் நடக்கும் அதிகாரத் துஷ்பிரயோகங்களைப் பார்க்கும்போது, இப்புதிய சட்டங்கள் பற்றிய பலவிதமான கவலைகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக, சட்டப் பிரிவுகள் 2,3,4 மற்றும் பயங்கரவாதம் பற்றி விளக்கப்பட்ட சட்டப்பிரிவு 16(1) இனாலும் தடைசெய்யப்பட்ட பரந்தளவிலான நடவடிக்கைகள் பற்றி நாம் அவதானித்துள்ளோம். இச்சட்ட உடன்பாடுகள் எல்லாம், ஊடகம் மற்றும் பொது அமைப்புக்களின் சட்டரீதியான ஜனநாயக நடவடிக்கைகளைக் குற்றப்படுத்திப் பார்க்கச் சந்தர்ப்பமளிப்பதோடு, அரசியல் யாப்பினால் பாதுகாக்கப்பட்ட கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகளையும் ஆக்கிரமிக்கக்கூடிய விஸ்தாரமான சொற்களாலானவை.

பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாதக் குழுக்கள் என்று அடையாளங்காணப்பட்ட நிறுவனங்கள் மீதான தடையிலிருந்து விதிவிலக்களிப்பது (சட்டம் 4ன் முதலாவது ஷரத்து) இப்புதிய சட்டங்களில் உள்ளது. அதனால், பயங்கரவாதிகள் அல்லது பயங் கரவாத நிறுவனங்கள் என்று தீர்மானிக்கப்பட்டவற்றோடு ஏதாவதொரு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய சந்தர்ப்பத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியின் (சட்டப்பிரிவு 11ன் படி நியமிக்கப்பட்ட) எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றே அதனைச் செய்யமுடியும்.

சுதந்திர ஊடகங்களையும் பொதுமக்கள் குழுக்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் வன்முறைக்குச் சுலபமாக இடமளிக்கக்கூடியதுமான இது, ஒரு விரிவுபட்ட அதிகாரமாகும். இதேபோலவே முறைப்பாட்டு நீதிமன்றத்தின் சட்டப்பிரிவுகள் 13 இலும் 14 இலுமுள்ள புதிய அம்சங்களும் மீள்பரிசோதனைகளில் அதிகாரமாக நடவடிக்கை எடுக்கும்போது, முக்கியமாக அந்நீதிமன்றத்தின் அங்கத்தவர்கள் அரசாங்க அமைச்சகங்களின் செயலாளர்களாகவிருக்கும் பட்சத்தில் சுதந்திரமாகத் தமது பங்கைச் செய்யுமென எதிர்பார்க்கவியலாது.

இவையெல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது இப்பரந்துபட்ட அதிகாரங்கள்; அடிப்படை உரிமைகள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் இல்லாமல், முக்கியமாகத் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகளில் நடைமுறைப்படுத்தப்படுமென்பது நினைத்துப் பார்க்க முடியாததாகும்.

இறுதியாக, சுதந்திர ஊடக இயக்கமானது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பது பற்றிய விளக்கத்தை எதிர்பார்க்கிறது. எந்த விதமான தடைகளோ அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்னும் பல சட்டங்களோ அறிவிக்கப்படாத இந்தக் கட்டத்தில், 2006 டிசம்பர் 6இல் ஜனாதிபதி மக்களுக்கான தமதுரையில, அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சில பிரிவுகளை மீண்டும் செயல்முறைப்படுத்துவது எனத் தீர்மானித்திருப்பது பற்றிக் கூறியுள்ளார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமக்குரிய அதிகாரங்களில் சிலவற்றை, பெப்ரவரி 2002 போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையிலே பயிற்சிப்படுத்தாது என்ற அரசாங்கத்தின் நிலையை மேலும் விரிவாக விளக்குதல் மிகவும் உதவியாயிருக்கும்.

எம்மால் இங்கு குறிப்பிடப்பட்ட முக்கியமான விடயங்களைப் பற்றி விரைவாக விளக்கங்கொடுக்க வேண்டுமெனவும், ஜனநாயக அதிகாரங்களையும் அடிப்படை உரிமைகளையும் பலப்படுத்துமாறும் நாம் அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு- (+94)777 315665 பேச்சாளர்- எஸ். சிவகுமார், 077 315665-
நிறுவுனர்-சுனந்த தேசப்பிரிய, செயலாளர்- சுனில் ஜயசேகர (011 2851672/3)
இல.237/22, விஜய குமாரதுங்க வீதி, கொழும்பு-05.

# 6.3 பின்னிணைப்பு 3:

**‘வடக்குக் கிழக்கில் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் கண்டிக்கிறது’ என்ற தலைப்பில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா பல்பிடா 2006 ஒக்டோபர் 27இல் வெளியிட்ட அறிக்கை.**

**‘வடக்குக் கிழக்கில் ஊடக சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் கண்டிக்கிறது’**

இலங்கை அரசாங்கம் வடக்குக் கிழக்கில் ஊடகவியலாளர்களுக்கெதிரான தாக்குதல்களைக் கண்டிக்கிறது. இம்மாதிரியான தாக்குதல்கள் பயங்கரவாதக் குழுக்களாலும் ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத தரப்பினராலும் தான் மேற்கொள்ளப்படுகிறது என்பது இலங்கை அரசாங்கத்தின் நம்பிக்கையாகும்.

இம்மாதிரியான சம்பவங்களில் சமீபத்தில் நடந்தது, மட்டக்களப்பில் கடந்த திங்களன்று வீரகேசரியின் பிரதிகளை எரித்ததாகும். இச்சம்பவத்தை இலங்கை அரசாங்கம் கண்டிப்பதுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நடந்த சம்பவங்கள் தொடர்பான முழு விசாரணைகளையும் மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் ஊடக சுதந்திரத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளதுடன், ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் பாதுகாப்பதற்கேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. அத்துடன், பத்திரிகை பிரதி விநியோகத்தைத் தடுப்பதானது, தகவல் பெறுவதற்கான சுதந்திரத்தின் மீதான தாக்குதல் என்றும் அது ஜனநாயகத்தில் ஒத்துக்கொள்ளப்படாதது என்றும் அறிந்துள்ளது.

தகவல்களைத் தருவதற்கு ஊடகங்களுக்கு முழுமையான சுதந்திரமுள்ளது, அதனை எந்தக் குழுவோ அல்லது தனி மனிதனோ தடுக்க முடியாது. இப்படியாக ஊடகங்களின் மேலான தாக்குதல் அவமதிப்புகளை எந்த விதத்திலும் அரசாங்கம் பொறுத்துக்கொள்ளாது என்பது மட்டுமல்ல, ஊடகச் சுதந்திரத்தைப் பலப்படுத்தவும் நிலைநாட்டவும் இயலுமான நடவடிக்கைகளை அது எடுக்கும்.

அனுஷா பல்பிட
பணிப்பாளர், அரசாங்கத் தகவல் நிலையம்

# 6.4 பின்னிணைப்பு 4:

**அமைச்சர் மற்றும் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹெலிய றம்புக்வெல்ல, தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோருக்கு அறிக்கையைச் சமர்ப்பித்து சர்வதேச ஊடக அனுசரணை(IMS) அமைப்பு எழுதிய பகிரங்கக் கடிதம்.**

மதிப்பிற்குரிய அமைச்சர்களுக்கு,

சர்வதேச பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பான பணிக்குழுவினால் தயாரிக்கப்பட்ட 'இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும்: நிலைத்திருப்பதற்கான பிரயத்தனம்' என்ற அறிக்கையை நான் உங்களிடம் முன்வைக்க விரும்புகிறேன்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச பணிக்குழுவினால் கண்காணிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் 'சர்வதேச பணிக்குழு' 14 சர்வதேச ஊடக சுதந்திர அமைப்புக்களை உள்ளடக்கியது என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். எனினும், இந்த அறிக்கையை, சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு, சர்வதேச பத்திரிகை ஸ்தாபனம், சர்வதேச பத்திரிகை பாதுகாப்புச் சபை, ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனம், எங்களது சொந்த நிறுவனமான சர்வதேச ஊடக ஒத்துழைப்பு அமைப்பு ஆகியன உள்ளிட்ட 14 அமைப்புக்கள் இணைந்து தயாரித்தன.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையின் கருத்துச் சுதந்திரம் தொடர்பான பக்கச்சார்பற்ற ஒரு கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்குகிறது. தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கடந்த ஆண்டு முரண்பாடுகள் தலைதூக்கியதிலிருந்து கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், மற்றும் ஊடக சுதந்திரச் சூழ்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டு வருவதை 'சர்வதேச பணிக்குழு' கண்டறிந்துள்ளது. இது, பாதுகாப்பற்ற நிலையைத் தோற்றுவித்திருப்பதுடன், வன்முறைகளுக்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது. ஊடகத்துக்கும் ஊடகத்துறையில் பணிபுரிவோருக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளும் தாக்குதல்களும் உலகிலேயே வன்முறைகள் அதிகரித்த ஒரு நாடாக இலங்கையை உருவாக்கியுள்ளது. மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினாலும், இவர்களுடன் இணைந்து செயற்படும் துணை இராணுவக் குழுக்களினாலும், ஊடகங்களும், ஊடக சமூகத்தினரும் கொல்லப்பட்டும், துன்புறுத்தப்பட்டும் வருகின்றனர். இவற்றுக்கு மேலதிகமாக, நேரடியான அல்லது மறைமுக தணிக்கையால், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்ற அடிப்படை உரிமையில் தங்கியுள்ள சுதந்திர ஊடகச் சூழ்நிலை அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கிறது.

2006 ஒக்டோபரில், சர்வதேச பணிக்குழுவுக்கும் அமைச்சர் கெஹலிய றம்புக்வெல்லவுக்கு மிடையில் இடம்பெற்ற சந்திப்பில், ஊடகச் செயற்பாட்டாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென உறுதிமொழி வழங்கப்பட்டதை நாங்கள் வரவேற்கிறோம். அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க 9 ஊடகச் செயற்பாட்டாளர்கள் கொல்லப்பட்டமை தொடர்பான தகவல்களை, 2006 ஒக்டோபர் 25ஆம் திகதி அமைச்சர் கெஹெலிய றம்புக்வெல்லவுக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு வழங்கியிருந்தது. அந்தச் சமயத்திலிருந்து, இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டு, இந்த நாட்டில் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் இல்லை என்ற தெளிவான செய்தி வழங்கப்படும் என்று நாம் எதிர்பார்த்தோம்.

ஊடகவியலாளர்கள், மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களை அரசாங்கம் கண்டிப்பதாகவும், எந்தவொரு குழுவோ, அல்லது தனிநபரோ ஊடகத்தின்மீது தொந்தரவுகளை மேற்கொள்வதை சகித்துக்கொள்ளாது எனவும், அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் அநுஷா பல்பிட வெளியிட்ட அறிக்கையை 'சர்வதேச பணிக்குழு' வரவேற்றது. அத்தோடு, ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில், பொலிஸ்மா அதிபரினால் 'இயன்றளவு விரைவில்' மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்ட 'இந்தச் சம்பவங்கள் தொடர்பான முழுமையான விசாரணைகள்' தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ள 'சர்வதேச பணிக்குழு' ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது.

கௌரவ அமைச்சர் கெஹெலிய றம்புக்வெல்ல வழங்கிய உறுதிமொழி, மற்றும் அநுஷா பல்பிட்டவின் அறிக்கை என்பவற்றின் தொடர்ச்சியாக, இந்தக் கொலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த பகிரங்க அறிக்கையொன்று

வெளியிடப்படுவதன்மூலம், இந்த விடயத்தில் அரசாங்கத்தின் பற்றுறுதியைக் காட்ட முடியும்.

'சர்வதேச பணிக்குழு' இலங்கைக்கு வருகை தந்திருந்த 2006 ஒக்டோபர் காலப்பகுதிக்குப் பின்னர் இடம்பெற்ற இரண்டு பிரதான விடயங்கள் குறித்து உங்கள் கவனத்தைக் கோர அது விரும்புகிறது. முதலாவதாக, 2006 டிசம்பர் 6ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தினால் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட அவசரகால (பயங்கரவாதம், மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை தடுக்கவும், தடைசெய்யவும்) சட்டத்தினால், ஊடக சுதந்திரத்தின் மீது ஏற்படும் பாதிப்புக்குறித்து நாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம். இந்தச் சட்ட நடைமுறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாதம் தொடர்பான பரந்த வரைவிலக்கணமானது, கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றின்மீது கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதுடன், இந்த நாட்டிலுள்ள அனைத்து ஊடகங்களும் சுயதணிக்கையைக் கடைப்பிடிக்கும் நிலையையும் அது ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாவதாக, யாழ் குடாநாட்டில் தற்போது பத்திரிகை நிறுவனங்கள் எதிர்நோக்கும் அச்சுத்தாள், மை என்பவற்றுக்கான தட்டுப்பாடுகள் குறித்து உங்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். இந்த நிலைமையினால், தினமும் 20 பக்கங்களை அச்சிட்டு வந்த உதயன், வலம்புரி மற்றும் யாழ் தினக்குரல் நாளிதழ்கள் தற்போது நான்கு பக்கங்களை மாத்திரமே அச்சிடுகின்றன. இந்த நிலை தொடர்ந்தால், இந்த நிறுவனங்கள் பத்திரிகை அச்சிடுவதை முற்றாக நிறுத்தவேண்டிய நிலை ஏற்படும். கொழும்பிலிருந்து பத்திரிகை அச்சிடும் தாளை எடுத்துச்செல்லாமல் தடுப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டிருப்பதாக எமக்குத் தெரியவந்திருக்கிறது. ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்ட பின்னர் யாழ் குடாநாட்டுக்கான போக்குவரத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதை நாம் அறிவோம். எனினும், அச்சுத்தாள், மை ஆகியவற்றை கப்பல்கள் மூலம் யாழ் குடநாட்டுக்கு அனுப்புவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மறுப்புத் தெரிவித்தமை கவலையை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும். ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு தகவல்களை அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கும் நிலைமையின் அவசியத்தை நீங்கள் அறிவீர்கள் என்பதுடன், இதில் ஏற்படுத்தப்படும் தடையானது, உள்ளூர் செய்திகள் மற்றும் தகவல்களுக்கான பிரதான மூலமாக இருக்கும் பொறுப்புவாய்ந்த ஊடகவியலின் இடத்தை வெறும் வதந்திகளும், மிகைப்படுத்தப்பட்ட தகவல்களும் பிடித்து, இதன்மூலம் ஸ்திரமற்ற தன்மையும், வன்முறைகளும் தலைதூக்க இடமளித்துவிடும். ஆகவே, இந்த விடயத்தில் கூடியளவு விரைவில், அதிகூடிய கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கையை எடுக்குமாறு நாம் உங்களைக் கோருகிறோம். மேலும், கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ் பத்திரிகைகளை விநியோகிப்பதற்கு கிழக்கில் விதிக்கப்பட்டிருக்கும் தடையைவிட, இந்த விடயம் கூடுதல் அக்கறையை கோரிநிற்கிறது.

இறுதியாக, 2006 டிசம்பர் 23 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் சரத்து 1738, இலங்கையின் தற்போதைய சூழ்நிலைக்குப் பொருந்தும் என்பதை 'சர்வதேச பணிக்குழு' சுட்டிக்காட்ட விரும்புகிறது. இந்தச் சரத்தானது, ஊடகப் பணியாளர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டிப்பதுடன், சர்வதேச சட்டத்தின் பிரகாரம் தண்டனையிலிருந்து தப்பிக்கும் நிலைமையை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசுக்கு இருக்கும் கடப்பாட்டையும் வலியுறுத்துகிறது. இதன்மூலம், ஊடகவியலாளர்களின் தொழில்முறையான சுதந்திரத்துக்கும், உரிமைக்கும் மதிப்பளிக்குமாறும் அது கோருகிறது.

'ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான முக்கியமானதொரு கருவியாக ஊடக சுதந்திரம் இருக்கிறது. சர்வாதிகார ஆட்சியை நோக்கிய திருப்பு முனைக்கு எதிரான காப்புறுதியாகவும் அது உள்ளது' என, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2006 மே மாதம் இடம்பெற்ற சர்வதேச ஊடக சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்திருந்ததை இப்போது நாம் மீள நினைத்துப் பார்க்கிறோம். இந்த அடிப்படையில், இலங்கை மக்களின் அடிப்படை உரிமையான கருத்துச் சுதந்திரத்தை இலங்கை அரசாங்கம் பாதுகாக்கும் என்று நாம் நம்புகிறோம்.

'சர்வதேச பணிக்குழு' வின் செயற்பாட்டுடன் அரசாங்கம் கடைப்பிடித்த வெளிப்படையான, ஒத்துழைப்பு அணுகுமுறையை நாம் வரவேற்பதுடன், இந்தக் கடிதத்துக்கான பதிலை எதிர்பார்க்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

ஜேஸ்பர் கொச்பேக் (Jesper Hojberg)
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சர்வதேச ஊடக அனுசரணை

# பங்குபற்றும் சர்வதேச நிறுவனங்களின் தொடர்பு விபரங்கள்

இக்குழுக்கள் பற்றிய மேலதிக விபரங்களுக்கும் அறிக்கைகளுக்கும் பின்வரும் ஏதாவதொரு பங்குபற்றும் நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளலாம்:

**International Federation of Journalists - Asia-Pacific**
245 Chalmers St, Redfern Sydney NSW 2016, Australia
Tel: +612 9333 0999
Tel:+919818383669
Fax:+61293330933
ifj@ifj-asia.org
ifjsouthasia@hotmail.com
www.ifj-asia.org

**International Media Support**
Wilders Plads 8A, 1403 Copenhagen K, Denmark
Tel: +45 32 69 89 89
Fax: +45 32 69 89 94
i-m-s@i-m-s.dk

**International Press Institute**
Spiegelgasse2,A-1010Vienna, Austria
Tel:(+431)5129011
Fax:(+431)5129014
ipi@freemedia.at

**International News Safety Institute**
International Press Centre, Résidence Palace, Block C, 155 rue de la Loi,
B-1040 Brussels, Belgium
Tel:+3222352201
Fax:+3222352219
info@newssafety.com

**United Nations Educational, Scientific and Cultural Organization**
Division for Freedom of Expression, Democracy and Peace, 1, rue Miollis,
75732 Paris Cedex 15, France
Tel:+33(0)145681000
Fax:+33(0)145671690
www.unesco.org
*and*
UNESCOHouse, B5/29SafdarjungEnclave,NewDelhi110029,India
Tel:+911126713000
Fax: +911 126 713 001
www.unesco.org/newdelhi